# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77, யாழ்ப்பாணம் தொலைபேசி: 7233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ மாசி 1980 ★ இதழ் - 50




## பொன்னிதழ்


## 50

மில்க்வைற் செய்தி இதுவரை நாற்பத்தொன்பது மாதங்களாக வெளிவந்து இம்மாதம் ஐம்பதாவது இதழாக வெளிவருவதால் இது பொன்னிதழ் எனப் பெயர்பெறத் தக்கது. இதுவரை வெளிவந்த செய்தி இதழ்களில் நாட்டுக்குப் பயன் தருவனவாகிய பல எழுத்தோவியங்கள் வெளிவந்துள்ளன. நாட்டுக்கு நன்மைப்பணி புரியும் மில்க்வைற் தொழிற் சாலையின் ஐம்பதாம் ஆண்டு நிறைவைக் குறிக்கும் பொன்விழா மலர் ஒன்று மூன் றுண்டுகளுக்கு முன் பூத்துக் குலுங்கிற்று.

சென்ற 1979ஆம் ஆண்டு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின் நூற்றுண்டு விழாவைக் குறிக்கும் சிறப்பு மலரும், சுவாமி விபுலாநந்தர் அவர்களின் முத்திரை வெளியீட்டு நினைவாக வெளிவந்த சிறப்பு மலரும் தரமானவை என்று தமிழ்கூறும் நல்லுலகம் நன்கு பாராட்டி எம்மை ஊக்கப்படுத்தியமைக்கு எங்கள் உளங்கனிந்த நன்றி உரியதாகுக.

*மில்க்வைற் செய்தியின் அபிமான வாசகர்கள் உள் ளூரிலேயன்றி, உள்நாட்டிலேயன்றித் தமிழ்நாடு, வட பாரதம், மலேயா, சிங்கப்பூர், போர்ணியோ, பிஜித் தீவுகள், பர்மா, அந்தமான்தீவு, இந்தோனேசியா, ஜப்பான், நோர்வே, பிரான்ஸ், ஜேர்மனி, இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, தென்னாபிரிக்கா, டுபாய் முதலிய பல்வேறு நாடுகளிலும் வாழ்கின்றார்கள். சில இடங் களில் ஒருவர் செய்தி இதழைப் படிக்கும்போது பலர்*

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)



சுன்னாகம் சிறுகைத்தொழில் நிலையத்தில் மாதர் சங்கம் நடாத்தும் பனை ஓலை கைத்தொழிலை ஊக்குவிக்குமுகமாக பனைஓலை வாரும் யந்திரத்தை சிறு கைத்தொழில் இலாக்கா அதிகாரி திரு. விஸ்வலிங்கம் அவர்களிடம் மில்க்வைற் அதிபர் அன்பளிப்பாக வழங்குதல்.

★ ஐம்பதாம் மாதச் சிறப்பிதழ் ★

உ
சிவமயம்



# கடவுள் வணக்கம்

## திருநாவுக்கரசுநாயனர் தேவாரம்

கோயில் என்னும் சிதம்பரம்

திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
நினைப்ப வர்மனங் கோயிலாக் கொண்டவன்
அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழு தும்மறந் துய்வனே.

திருச்சிற்றம்பலம்

பனைமரம்போன்ற கரிய பரிய கையினையும், கன்னமதம் கபோலமதம் பீஜமதம் என்னும் மும்மதங்களையும் உடைய யானை உருவததைக் கொண்டவனாகிய கயாசுரன் என்னும் அரக்கனை உரித்தருளி வீரச்செயலைச் செய்தருளியவரும்; தம்மை நினைப்பவர்களுடைய மனத்தைத் திருக்கோயிலாகக்கொண்டு எழுந்தருள் செய்பவரும், போகவடிவம், யோகவடிவம், வேகவடிவம் ஆகிய பலவித திருவடிவங்களைக் கொண்டருளுபவராகிய திருவம்பலத்துத் திருக்கூத்தியற்றியருளுபவராகிய இறைவனை, அடியேன் தினையளவு என்னும் கணப்பொழுதும் மறந்து வாழமாட்டேன்.



## திருச்சிற்றம்பலவன்

முந்திய திருப்பதிகமொன்றில் திருச்சிற்றம்பலத்தின் சிறப்புக்களைப் பல பாடல்களாற் போற்றிப் பரவிய அப்பர் அடிகள் இப்பதிகத்தில் அங்கே எழுந்தருளி ஆனந்தத் திருக்கூத்தாடும் அழகிய திருச்சிற்றம்பலவனை அகம் குழையப்பாடி நின்றழுவர்.

திருச்சிற்றம்பலவன் பாவங்களைக் கழுவிப் போக்கும் தீர்த்தம். அவர் சிவன் என்னுந் திருநாமம் உடைய பேரின்ப வடிவினர். அவர் சிவலோகன். ஞானவுருவினன் உலகத்தின் தோற்றத்துக்கு மூலமாய் முதலில் உள்ளவர். வேடனாய்த் தோன்றி அருச்சுனனுக்குப் பாசுபதம் ஈந்தருளியவர். அவர் தம்மைச் சுற்றிக்கட்டிய பாம்பினையும் திருக்கையில் பிரம கபாலத்தையும் மான்கன்றையும் உடையவர், சர்ஸ்சங்கார காலத்தில் சுடுகாட்டு நெருப்பிடை நின்று நடனஞ்செய்பவர். முன்னர் மார்க்கண்டேயர் என்னும் பிரமசாரி பசுப்பால்கொண்டு தீர்த்தமாடியபோது நெடியவுலகங்கள் பலவற்றை ஆண்டநுபவிக்கக் கொடுத்தருள் புரிந்தவர், பொன் உரையாணி போன்றவர். அவர் பித்தன் என்னும் திருநாமம். உள்ளவர் இடுகாட்டையே ஆடுமிடமாகக் கொண்டவர், இயல்பாகவே பந்த பாசங்களினின்றும் நீங்கியவர். இளம்பிறை சூடியருளிய எல்லாம் வல்ல சர்வசித்தர்.

அவர் நீதிவடிவானவர். எல்லாவகையாலும் பூரணமானவர். இருக்கு யசுர்சாமம் அதர்வணம் என்னும் நான்கு வேதங்களையும் பெரியவர்களுக்கு உபதேசித்தவர். அவர் எவராலும் அறியமுடியாத அறிவுக்கு அறிவான சோதியாய் உள்ளவர். அவர் செம்பொன்னம்பலத்தின் ஆதியானவர். அவர் நீலநிறம் பொருந்திய ஆலகாலவிடத்தை அடக்கியதால் கறுத்த கண்டத்தை உடையவர். எட்டுத் திருத்தோள்களை உடையவர். சோமன், சூரியன், அக்கினி என்னும் முச்சுடர்களான கண்கள் மூன்றுடையவர். படம் எடுத்த பாம்பினை அரையிலே கட்டிய மேலானவர். செல்வத்துக்குத் தெய்வமாகிய திருமகள் விரும்பியுறையும் திருச்சிற்றம்பலத்தவர் எல்லோருக்கும் தலைவராவர் விண்ணுலகத்திலுள்ள தேவர்களும் இங்கேவந்து பரவிப் போற்றிக் கனகம் என்னும் சிறந்த பொன்பரப்பி வேந்த விமானமுடையவர் திருச்சிற்லம்பலவனர். அவர் கார் காலத்து நிறையப்பூக்கும் கொன்றை மலர் மாலையை அணிந்தருளியவர், கச்சணிந்த கனத்த தனங்களையுடைய உமாதேவியாரின் கேள்வன், தேர் உலாவும் பெருவீதியையுடைய தில்லையம்பலத்து இறைவன், உண்ண உண்ணத் தெவிட்டாத அமுதத்தையொத்தவர். அவர் உயர்ந்த திருக்கைலாயத் திருமலையை எடுக்க முயன்ற இராவணனின் சிரங்கள் பத்தும் பருத்துவிம்முதல் அடையும் வண்ணம் தமது திருவடியை அவன்மேல் ஊன்றியருளிய பேராற்றல் பொருந்தியவர்.

## பெப்ருவரி மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | வெள்ளி | — | கீரிமலை நகுலேசுரர் கொடி |
| 12. | செவ்வாய் | — | ஏகாதசி விரதம், மாத்தளை முத்துமாரியம்மை கொடி |
| 14. | வியாழன் | — | பிரதோஷ விரதம், நகுலேஸ்வரர் தேர், மகா சிவராத்திரி விரதம் |
| 16. | சனி | — | அமாவாசை விரதம் |
| 21. | வியாழன் | — | முன்னேஸ்வரம் முன்னைநாதர் கொடி |
| 22. | வெள்ளி | — | கார்த்திகை விரதம் |
| 26. | செவ்வாய் | — | ஏகாதசி விரதம் |
| 28. | வியாழன் | — | பிரதோஷ விரதம் |
| 29. | வெள்ளி | — | நடேசர் அபிஷேகம் |

★ சிறியதை நாடித் திரிபவன் பெரியதை இழக்கின்றான் ★




## பெரியாரைப் பிழையாமை

**பெரியாரை மதித்து ஒழுகாமை**

எரியாற் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்

தீயினற் சுடப்பட்டாயினும் பிழைத்துக்கொள்ளலாம்; பெரியாரிக்குக் குற்றம் செய்து நடப்பவர் எவற்றானும் பிழைத்துக்கொள்ள மாட்டார்.

**Abstention from offending the great**

They who have sustained burns in a fire may recover and live, but they who have offended the great cannot live.

---

## தொட்டிலிட்டுத் தாலாட்டுதல்

திருமணச்சடங்கு நிறைவேறிச் சில மாதங்கள் கழிந்தன. மணமகள் கர்ப்பவதியாயினள் என்னுஞ் செய்தி இரு குடும்பங்களுக்கும் மாத்திரமன்றி அவர் தம் உற்றார் உறவினர், அயலவர், நண்பர்கள் என்ற இத்திறத்தார் எல்லோருக்கும் பெருமகிழ்ச்சி. எல்லோருக்கும் பூரிப்பு. பெண்கள் யாவரும் மங்கலங்கள் பொங்கக்கூடிக் கர்ப்பிணியான தாய்க்குப் பல சிறப்புச் செய்கிறார்கள். பூச்சூடல் வளையல் காப்பணிதல், முதலிய சடங்குகள் நடைபெறுகின்றன. உரியகாலத்தில் உத்தமபுத்திரன் பூமியிற் ஜனனம் என்பதில் எல்லோருக்கும் ஒரே குதூகலம். பிள்ளை பிறந்து விட்டான். மங்கலச்சடங்குகள் யாவும் ஒன்றன்பின் ஒன்றாய் நடைபெறுகின்றன. ஜாதகம் கணித்தல், பெயரிடுதல் கோயிலுக்குக் கொண்டுபோதல், தொட்டிலிடுதல், பல்லுக் கொழுக்கட்டை அவித்தல், காதுகுத்துதல், சோறு தீற்றுதல், சிறுதேர் உருட்டுதல், ஏடுதொடக்குதல், பள்ளிக்கு வைத்தல், காவடி எடுத்தல் முதலிய சடங்குகள் காலத்துக்குக் காலம் நடைபெறுகின்றன. இவற்றில் சமூகத்தவர் எல்லோரும் சேர்ந்து பெரிய கொண்டாட்டங்களில் இன்புறுகிறார்கள். விழாக்களின்போது பிள்ளைக்குப் பலரும் பல விதமாகச் செல்லப் பெயரிட்டு வழங்குவதும் உண்டு.

அன்று தொட்டிலிடுதல். உறவினர், உரியவர், அயலவர் கூடிவிட்டார்கள். தாய்வழி தந்தைவழிப் பாட்டன்மார் பாட்டிமார், மாமன்மார், மாமிமார், சித்தப்பர், பெரியப்பரி எல்லோரும் கூடிவிட்டனர். பாலுள்ள மரத்தாற் செய்த தொட்டிலை ஆசாரியார் கொண்டுவந்துள்ளார். பலா அல்லது இலுப்பை மரம் அக்காலத்திற் பயன்பட்டுவந்தது. பச்சை இலுப்பை வெட்டிப் பால்வடியத் தொட்டில் செய்தல் வழக்கம் என்பர்.

குழந்தைக்கு குளிக்கவார்த்து ஈரந்துவட்டிப் புத்தாடை புனைந்து திருநீறிட்டுச் சந்தனம் பூச்சாத்திப்பொட்டுமிட்டபின் பலவகையான ஆபரணங்களை அணிகிறார்கள். இவை மாமன்மார் பெரியப்பன்மார் சித்தப்பன்மார் உட்பட உறவினர் கொண்டுவந்து குவித்த சீர்கள் என்னும் பரிசுகளாகும். சின்னம்மான் என்ன தந்தார்? பெரியம்மான் என்ன தந்தார்? என்ற வினாக்களும் விடைகளும் பின்னர் தாலாட்டுப் பாடல்களில் இடம்பெறப்போவதால் எல்லோரும் வரிசைக்கு முந்திநின்று பரிசுகள் வழங்குகின்றார்கள்.

காலிலே வெள்ளிக்காப்பு, கையிலே தங்கக்காப்பு, மரவட்டைக்காப்பு, வேப்பிலைக்காப்பு, சங்குக்காப்பு இன்னும் எத்தனை எத்தனை வண்ணக்காப்புகள். கைவிரல்களிலே மோதிரங்கள், இடுப்பிலே பொன் அரைஞாண், கறுப்புக்கயிறு. இவற்றில் பொற்காசு, நாயுருவம், புலிப்பல், புங்கங்காய் முதலியன கோத்திருக்கும். கழுத்திலே சிறு பொன்மாலை, அதிலே தண்டுசக்கரம் வில்வாள் சங்கு முதலிய உருவங்கள் வரைந்திருக்கும். தாலிஐம்படை தழுவுமார்பு. இவை காவலுக்கு அமைந்தமை போதாது என்று கையில் கறுப்பு நூலும் கட்டப்படுகிறது.

இவ்வளவு அலங்காரங்களையும் பெண்கள் நான்முந்தி, நீமுந்தி என்று முனைந்து செய்கிறார்கள். பிள்ளைக்குக்களை எடுக்கிறது. பாலில் சிறிது சர்க்கரையிட்டுப் பருக்குகிறார்கள். வந்திருந்தவர்கள் எல்லோருக்கும் வரிசையறிந்து உபசாரங்கள் நடைபெறுகின்றன. வெற்றிலை பாக்கு, சர்க்கரை, கற்கண்டு, வாழைப்பழம் இவற்றோடு சிறிதளவு காப்பரிசியும் வழங்குகிறார்கள்.

நீண்டகாலம் மஞ்சள் குங்குமத்தோடு தாலிதழைக்க வாழ்ந்திருக்கும் மூதாட்டி ஒருத்தி தன் பொக்கைவாயை மடித்தபடி பிள்ளையை முகமலர்ச்சியோடு தூக்கி அலங்கரித்திருந்த தொட்டிலில் வளர்த்துகிறாள்.

இனித் தொட்டிலைத் தொட்டு ஆட்டுவதற்குப் பெரிய போட்டி. ஆனால் எல்லோருக்கும் சந்தர்ப்பம் கிடைக்கிறது. பெண்கள் மெதுவாகத் தொட்டிலைத் தொட்டசைத்து இனிமையாகப் பாடுகிறார்கள். அந்தப்பாடல்கள் அவர்கள் இருதயத்திலிருந்து இசையோடு கிளம்பி இனிய குரல் வழியாக வெளியே ஒலிக்கின்றன. அவற்றில் பிள்ளையின் அருமையும், பெற்றோரின் பண்பும், உற்றோரின் சிறப்பும் பிரதிபலிக்கின்றன. எல்லோரும் தொட்டில் அசைத்துப் பாடியபின் குழந்தையின் தாயும் மெதுவாகப் பாடுகிறாள். பின்னர் எல்லோரும் விருந்துண்டு பிள்ளையையும் தாயையும் வாழ்த்தி விடைபெற்றுப் போகிறார்கள்.

இர்வு வருகிறது. இளம் தாயின் இதயத்தில் பெரிய பூரிப்பு. அமைதியான வேளை. பிள்ளையை எடுத்துச் சுரந்து வந்த தாய்ப்பாலை அன்புடன் ஊட்டுகிறாள். பிள்ளையை அணைத்தபடி அங்குமிங்கும் உலாவுகிறாள். அவளுக்கும் பாட்டு வருகிறது. பிள்ளையைத் தொட்டிலிற் படுக்க வைத்து மெதுவாக அதனை அசைத்து அருகில் நின்று இனிமையாகப் பாடுகிறாள்.

(பாட்டு அடுத்த இதழில் கேட்கும்)

---

**கோபாவேசத்தைப் பொறுமையால் எதிர்ப்பவன் அறிவாளி**

முற்றொடர்:

## ஒவ்வொன்றுக்கு ஒவ்வொருவர்

# பரீட்சகர் ஒருவர் கனகசுந்தரம்பிள்ளை

கனகசுந்தரம் பிள்ளையவர்களின் வடமொழியறிவும் தமிழ்ப்புலமையும் அவருக்கிருந்த ராமாயண இரசனையுங் காரணமாக அவர் வான்மீகி ராமாயணத்திலிருந்து கிட்கிந்தா காண்டத்தையும் சுந்தரகாண்டத்தையும் தூய செந்தமிழில் மொழிபெயர்த்துதவினர். அன்றிக் கம்பராமாயணத்தில் ஏட்டுப் பிரதிகள் பலவற்றை ஒப்புநோக்கி எதிர்காலத்தில் சுத்தமான பதிப்பு வெளிவர உபகரித்தார்.

அக்காலத்திலே ஈழநாட்டிலேயன்றித் தமிழ் கூறும் நிலப்பரப்பெங்கும் அறிவுச் செங்கோல் நடாத்திய பெரும் புலமையாளர் சுன்னுகத்துக் குமாரசுவாமிப் புலவராவர். பிள்ளையவர்கள் தம் கருத்தைப் புலவரவர்களுக்குத் தெரிவித்தார். இருவரும் கங்கை யமுனை நதிகள்போலக் கூடினர். அவர்கள் அறிவும் புலமையும் பொங்கித் ததும்பிப் பூரணமாகிப் புதுப்புனல்போலப் பிரகாசிக்கத் தொடங்கின. அதனுற் பாலகாண்டம் மிக அருமையான அரும்பத வுரையுடன் 1918-ஆம் ஆண்டில் வெளிவருவதாயிற்று.

அந்நூலைத் தாம் ஏன் பதிக்க முற்பட்டார் என்பதற்குரிய காரணங்களை அவர் முகவுரையில் அழகாகக் கூறியுள்ளார். இப்பொழுது இவ்விராமாயணம் பலவித வழுக்களும், பாடபேதங்களும் விரவிவருவதை நாம் அநுமானித்து, இயன்றவரையிற் சுத்தமாக்கவெண்ணிப் பழைய ஏடுகள் பல வருவித்துப் பரிசோதித்தோம். பரிசோதித்த போது, முன்னர் அச்சிட்டுள்ள பாலகாண்டத்திலே பலவித வழுக்களும் பல பாடபேதங்களும் புதியனவாகப் புகுத்திய சில கவிகளும் தோன்றின.

மணிநுரைக்கொடி என்பது மணியுடைக் கொடி எனவும், மறிவிழியாயர் மாதர் என்பது மறியுடையாயர் மாதர் எனவும், கரும்பெலாம் என்பது கரம்பெலாம் எனவும், குறிகொளும் போத்திற் கொல்வார் என்பது குறிகளும் போற்றிக் கொள்வார் எனவும், வேளைவென்ற வுழத்தியர் என்பது வேளைவென்ற முகத்தியர் எனவும், குரவைக் கடைசியர் என்பது குரவை கடைசியர் எனவும் கண்டிலரங்கது என்பது கண்டிலா நகரது எனவும், தங்கு பேரருளும் என்பது தங்குமா பொருளும் எனவும், ஏகிநீ மீட்டவையியம்ப வேண்டுமோ என்பது தோகை பாகற்குச் சொல்லினுரரோ எனவும் பிழைபட்டிருந்தன.

பிள்ளையவர்களுடைய இராமாயணப் பித்து கோமளீசுவரன் பேட்டை இராசகோபாலபிள்ளையையும் இராமாயணத்தைப் பதிப்பிக்கத் தூண்டியது. மனேன்மணியந் தந்த திருவனந்தபுரஞ் சுந்தரம்பிள்ளைக்கு உதவிசெய்த யாழ்ப்பாணத்தார் இருவருள் ஒருவர் பிள்ளையவர்கள். மற்றவர் மேலைப்புலோலிக் குமாரசுவாமிப்புலவரின் சகோதரர் வில்கணியந்தந்த கணபதிப்பிள்ளையாவர்.

தமிழ்ப் பெரியார் கா. நமச்சிவாய முதலியார் தாம் பதித்த தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணம் பதிப்புரையில் எழுதிய வாசகம் இது. ''இளம் பூரணத்து எழுத்ததிகாரம் ஒன்றே சோடசாவதானம் சுப்பராயச் செட்டியார் அவர்கள் வெளியிட்டனர். சொல்லதிகாரமும் பொருளதிகாரமும் இதுகாறும் வெளிவந்தில. என் ஆசிரியர் திருமயிலைச் சண்முகம்பிள்ளை அவர்கள் கட்டளையைத் தலைமேற்கொண்டு அவற்றை வெளியிட முயன்றேன். இம்முயற்சி முற்றுமாறு ஏடுதேடிய காலத்து என் நண்பர் அனவரத விநாயகம் பிள்ளையவர்கள் தம்மிடமிருந்த ஏடு ஒன்றினை அன்புடன் தந்தனர். இவ்வேடு கனகசுந்தரம் பிள்ளைக்கு உரியதாம்.''

ஆறுமுகநாவலர் அவர்களுக்குப் பின்னரும் அன்னர் அச்சுக்கூடத்துப் பதிப்புக்களில் பிழைகள் இல்லாமல் வெளிவந்தமைக்குக் காரணராயிருந்தவர் கவனமாகப் புறூவ் பார்த்துக்கொடுத்த கனகசுந்தரம்பிள்ளையவர்களே யாவர். அன்றி, சாண்டிலர் என்பார் தொடங்கித் தொகுத்து வந்த தமிழகராதிக்கும் துணைப்பதிப்பாசிரியராய் இருந்து அகராதி வேலையில் ஒவ்வொரு சொல்லாக ஆராய்ந்து உதவிசெய்த பெருமை பிள்ளையவர்களுக்கே உரியது.

பாண்டித்துரைத்தேவர் அவர்கள் மதுரையில் நிறுவிய நான்காம் தமிழ்ச்சங்கம் அக்காலத்தில் அரிய தமிழ்ப் பணி செய்து வந்தது. அச்சங்கத்திற் பரீட்சகராயிருந்து பண்டித பரீட்சைகளைத் திறம்பட நடத்திய பெருமை பிள்ளையவர்களுக்கே உரியது. அவர் பலகாலம் பரீட்சா சபையில் தலைவராயும் இருந்தார் என்பர். அங்ஙனமே சென்னைப் பல்கலைக்கழகப் பரீட்சகராகவும் பரீட்சா குழுவில் தலைவராயும் அவர் இருந்தார்.

இங்ஙனம் ஆசிரியராகவும், பேராசிரியராகவும், உரையாசிரியராயும், பதிப்பாசிரியராயும், தொகுப்பாசிரியராயும், ஆராய்ச்சியாளராயும், பரீட்சாதிகாரியாயும் இருந்த பிள்ளையவர்கள் 1922 ஆம் ஆண்டுவரை வாழ்ந்து தமிழ்த் தொண்டு செய்துள்ளார்.

முற்றும்

---

சென்ற நூற்றுண்டில்


## வடமாகாண அரசாங்க அதிபர் அக்லன் டைக்

பத்தொன்பதாம் நூற்றுண்டில் யாழ்ப்பாணத்து இராசா என்று பொதுமக்கள் கொண்டாடும்வண்ணம் மாகாண அரசியற் பரிபாலனத்தைத் திறம்பட நடத்தியதோடு பலவித நன்மைகள் செய்தவர் டைக். விவசாயம், நீர்ப்பாசனம், போக்குவரத்து, சுகாதாரம், கல்வி முதலிய துறைகளில் இவர் பணிபுரிந்தமையை மக்கள் மறக்கவில்லை. இவர் 8-10-1829 முதல் 8-10-1867இல் இறக்கும் வரை இங்கே பணிபுரிந்தவர். வேறு பல உயர்ந்த உத்தியோகங்களை விரும்பாது யாழ்ப்பாணத்தை உள்ளன்போடு விரும்பிய இவரின் நினைவாக வீதிதோறும் பாரிய மலைவேம்புகள் நிற்பதைக் காணலாம். இம்மரங்களில் பெரும்பாலானவை இவரால் நாட்டப்பெற்றவை.

---

★ திருப்திக்கு நிகரான சன்மானம் உலகில் இல்லை ★

# மறைந்தும் மறையாத மற்றொரு மறையவர்



பிரம்மஸ்ரீ அ. ஆனந்தநடேசக் குருக்கள்

துணைவி என்னும் ஊரைச் சேர்ந்த அந்தணப் பெரியார்களுள் சபாநடேசக் குருக்கள். ஆனந்தநடேசக் குருக்கள் என்னும் இருவர் அண்ணனுந் தம்பியுமாவர். இருவரும் வைதிகத்திருவுடையவர்கள். ஆகமங்களில் வல்லவர்கள். திருக்கோயிற் கிரியைகள் உற்சவாதிகள் செய்வதில் இணையில்லாதவர்கள். இருவரும் புராணபடனஞ் செய்வதில் திறமை வாய்ந்தவர்கள். திருநாமம் ஐந்தெழுத்தும் திருமுறைகள் பன்னிரண்டும் செப்பும் நாவர்.

ஆனந்தநடேசக் குருக்கள் சென்ற ஐம்பது ஆண்டுக் காலமாகத் திருநெல்வேலி நீலாயதாட்சி சமேத காயாரோகணருக்கு ஆட்பட்டு அவருக்குப் பணிசெய்து, அவருக்குப் பூசை புரிந்து அவர்நினைவிலேயே வாழ்ந்தவர்.

பெரிய குருக்கள் என முன்னர் பெயர்பெற்ற பிரம்மஸ்ரீ சபாபதிக்குருக்கள் அவர்களின் பெண்ணைத் திருமணஞ் செய்து, அவர் வழியில் பூசைபுரிந்து தம்மை மறந்து வாழ்ந்தவர். கோயிற் பூசைகள் முதலியன குறைவறச் செய்துவந்த குருக்கள் அவர்கள் பூர்வக்கிரியாமுறைகள் வல்லவராய்த் திருநெல்வேலியின் அயல் ஊர்கள் எங்கும் அபிமானிக்கப்பெற்றவர்.

சைவசமயத்தவர்களேயன்றிப் புறமதத்தவர் பலரும் குருக்களிடம்வந்து சோதிடம் கணிப்பித்துப் பார்வை பார்ப்பித்து நூல் முதலிய ரட்சைகள் அணிந்து சென்ற வைபவங்கள் பல. தானம் முதலிய கொடைப்பொருள்களில், ஆசையில்லாத அந்தணராய், உள்ளதைக் கொண்டு மானசீகமாகப் பெரும் பூசைகள் புரிந்து ஏழைமக்களின் வாழ்வில் மகிழ்ச்சியையும் மலர்ச்சியையும் நம்பிக்கையையும் ஊட்டிய பெரியார் ஆனந்தநடேசக் குருக்கள்.

குருக்கள் அவர்கள் திருநீற்றை விரல்களில் எடுத்துச் சிவத்தியானஞ்செய்து திருவைந்தெழுத்து ஓதி, ஆகம முறையில் ஒருவரைத் திரிகரணசுத்தியோடு வாழ்த்தும்போது, வாழ்த்தப்பெறுவோரும் பக்கலில் நிற்போரும் பூரித்து விம்மிதம் அடைதல் வழக்கம்.

தொண்ணூறு வயதுவரை வாழ்ந்த குருக்கள் அவர்கள், பால்போல் நரைத்த முடியும் தாடியும் உள்ளவராய்க் குழந்தைப் பராயத்து உள்ளத் தூய்மையுடன் வாழ்ந்ததை எல்லோரும் அறிவர். அவர் இவர் என்று பாரபட்சம் பாராது, எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்று எல்லோரையும் வாழ்த்தும் மகானுபவர்கள் அவரைப்போல் வேறு சிலர் மிகமிக அருமையாக இருக்கலாம்.

சில மாதங்கள் நோயுற்றுப் படுக்கையிற் கிடந்தவேளையில், தாம் சிவபெருமானைச் சிதம்பரேஸ்வரனை இருபத்து நான்கு மணிநேரமும் தியானிக்கக் கூடிய வாய்ப்பைத் தந்தமை சிவபெருமானின் திருவிளையாடல்தான் என்று புன்முறுவலோடு உரத்துச்சொன்ன அவரின் மனநிலை மாண்புடையதேயாகும்.

தம்முடைய இறுதி நாள்வரை தம்மைக் காணச் சென்ற அடியார்களுக்குத் தம் கையாலே திருநீறும், கற்கண்டும் கொடுத்துவந்த பெரியவர் செவியினிக்கச் சில வார்த்தைகள் கூறவும் தவறுவதில்லை. அவரைக் கண்டு போவதையே பெரிய பேறெனக் கருதிப் போவோருக்கு அவர் நாவினிக்கச் செவியினிக்க விருந்து செய்து அச்சம் அகற்றி வெண்ணீறளித்து ஆசி கூறுவரேல் அவரைப் போன்ற மனோதத்துவ நிபுணரும் மந்திர ரட்சா துரந்தரரும் இன்னும் எத்தனைபேர் இருக்கிறார்கள் என்பது சொல்லத் தெரியாது.

தம்முடைய இறுதி நாளினை நன்கறிந்த குருக்கள் அவர்கள், தமக்குக் கபம் மிகுந்து வருந்தியபோது தமக்கு வைத்தியஞ் செய்வதற்கு உறவினர்கள் விரும்பினால் 22-1-80 செவ்வாய்க்கிழமைக்குப் பின் செய்யலாம் என்று சொன்னவர், 21-1-80 சோமவாரத்தன்று இரவு சிதம்பரேசா என்று வாய்திறந்து சொல்லிய சொல்லோடு தமது இறுதி மூச்சை விட்டு அமரரானார்.

குருக்கள் ஐயா அவர்கள் மில்க்வைற் தொழிலகத்தையும், செய்தியையும், தொழிலதிபரையும் நாள்தோறும் வாழ்த்தும் வழக்கம் உள்ளவர். அவரவர் கடமைகளைச் செவ்வனே செய்தல் வேண்டும் என்று சிந்தை நிறைவோடு சொல்பவர். இந்துசமயப் பாரம்பரியத்தை நாம் எல்லோமும் வரன்முறையாகக் கடைப்பிடித்தொழுகி நற்கதியடையவேண்டும் என்று அவர் அல்லும் பகலும் சொல்லிச் சொல்லி மக்களைத் திருத்திய உத்தமர். அவரின் ஆன்மா ஆனந்த நடனமிடும் அற்புதக் கூத்தனின் குஞ்சிதபாத நிழலில் அழியா இன்பத்து உறைதல் வேண்டும் என்று இறைவனை இறைஞ்சுவோமாக.

சுபம்

★ ஆசை எல்லோரிடமும் வேலை வாங்குகிறது ★

# பொன்னிதழ் வாழ்த்து

மில்க்வைற் தொழிலகத்தையும் அதன் சார்பில் வெளி வரும் செய்தித்தாளையும் கொடுமுடி புலவர் கொ. கு. சேதுபதிதேசிகன் அவர்கள் மலையம்மன் கோயில் வீதியி லிருந்து வாழ்த்தியனுப்பிய வாழ்த்துமடல்.

நிலம்பரவு மிலங்கையினில் நேரில்லாத் தமிழ்பரப்பு
 நிலைய மாகத்
துலங்குபெரு யாழ்ப்பாணத் தொன்மைமிகு மூதூரில்
 துரிசொன் றில்லா
திலங்கிவளர் திருவால வாயென்னு மெழிற்பெயரா
 லிலங்கு கின்ற
தலம்புணருஞ் சிறுகுடிலிற் கந்தையா தாபித்தார்
 சவர்க்கா ரத்தை 1.

அத்தொழிலை வளர்த்தற்கோ ரறிவாற்ற லநுபவமு
 மனைத்துஞ் சேர்ந்த
வித்தகனுஞ் சிவநெறிசேர் புரவலரென் றொருவன்நீ
 வினைத்திட் பத்தால்
தொக்கதனுல் துதைந்தவுடல் சுத்தமது பெற்றிடவுந்
 தூசின் மாசு
ஓக்கவுடன் போக்கிடவு முளத்தெழுந்த வூக்கத்தால்
 உறுதி மேவி 2.

மக்கள்மன மாசகல மதிநிறைந்த பெரும்புலவர்
 மதிப்பிற் றோய்ந்த
புத்திநிறை வாசகத்தால் பொதிந்ததொரு செய்தித்தாள்
 புறநாட் டோரும்
தக்கதிது வெனநினைந்து தாமன்றிப் பிறரெவரும்
 தமிழி னுய்ந்து
பத்தியினிற் படித்தொழுகும் பான்மையினிற் பண்புளதாய்ப்
 பரப்பி யிட்டாய் 3.

மில்க்வைற்றின் செய்தித்தா ளிதுவன்றிப் பிறவரிய
 மேன்மை பெற்ற
பொற்புமிகு பன்னிரண்டு திருமுறைகள் சாத்திரங்கள்
 போத மூட்டும்
பற்பலவா மறநெறிசேர் பாக்கணிறை நூலவையும்
 பலரும் போற்றும்
சொற்பல்காத் திருக்குறளுஞ் சோதிடமும் வாகடமுஞ்
 சொல்லு நூலும். 4.

யோகநெறிச் சாதனங்க ளுரைக்கின்ற யோகியர்கள்
 உண்மை சான்ற
தேசுநிறை மொழிகளவை திகழ்கின்ற செம்மைநூல்
 சிறக்க நல்கி
ஏகமது கற்பகமா மென்றுபுவி யுள்ளோர்கள்
 ஏத்து கின்ற
பாகமுறு பனைமரமே பன்மரத்திற் பாடுற்ற
 பான்மை யோர்ந்து. 5.

நாட்டிமிகு வளம்பெருக்கு நற்கனக ராசரெனு
 நாமம் பூண்டு
தீட்டிமிகச் சித்திரித்துத் திங்கடொறும் வெளியிட்டுச்
 சிறப்புற் றுய்ந்நீ
காட்டிமிகு புண்ணியமாம் கருமமிவை யென்றுலகோர்
 கண்டு கொண்டு
கோட்டிகொள நின்றிருக்குங் குணக்குன்றே குறிப்பாகக்
 குறிக்கின் றேனியான். 6.

ஐம்பதெனு மாண்டளவில் தொழில்நுட்பக் கலைகளெலா
 மறிதி னுய்ந்து
மொய்ம்புளதா யாக்கியிட்ட முழுப்பெருமை நினதேயாய்ப்
 பொருந்த லானும்
செம்மைபெறுந் திடமுடனைம் பதினுண்டி னெல்லைநினைச்
 சேர்த லானும்
நன்மைகொளு மிகுதிறத்தால் நாடியுய ராசியுரை
 நவின்றிட் டாரால். 7.

ஒன்றுபன்னென் றுயிரத்துத் தொளாயிரத்தி னெழுபத்தேழ்
 ஒன்றும் ஆண்டில்
நன்றுநில வும்மில்க்வைற் தொழிலகத்தி னுண்டதுவும்
 ஐந்து பத்தாய்
நின்றிலகப் பொன்னின்விழா நினக்குமது வேயாக
 நிகழ்ந்த வாற்றுல
உன்றனுடல் மனவலிமை தொழிலாக்க மெனவுரைக்கி
 னூ றொன் றுண்டோ. 8.

பொன்னின்விழா மலரென்னும் புகழுரைசேர் புத்தகத்தைப்
 பொருந்து மாற்றுல்
பன்னுமினி நூற்றுண்டின் வைரவிழா வதுநடத்தப்
 பரமன் றுளில்
என்னுடைய தலைவைத்து நின்னுடைய நலம்வேண்டி
 யிறைஞ்சி நாளும்
சொன்னவிது வெற்றுரையன் துன்றன்பா லுரைத்ததெனு
 யுளங்கொள் வாயே. 9.

யானுரென் றுமக்குரைக்கு மவாமிகவு முடையேனு
 யன்பின் பாலாய்த்
தேனுறும் பொன்னிதழி செஞ்சடைமேற் றிங்களொடு
 சேரச் சூடிப்
பானுறும் மொழியுடைய வடிவுடையாள் வலப்பாகம்
 மகிழ்ந்து கொள்ளப்
பாநாறும் மூவர்சொலும் பதிகஞ்சேர் கொடுமுடியார்
 பாதம் போற்றி. 10.

குறவஞ்சி நாடகநூல் உரைத்ததிரு மலைக்கொழுந்தாய்க்
 குறித்த நாமம்
உறவஞ்சி யாதுபல வுண்மைசொலும் நாவலராய்
 உற்ற அன்னூர்
பெறுவஞ்சி யடிபோற்று மிராசலிங்கக் கவிராயர்
 பேரனும் யான்
செறிவஞ்சிச் சிலவுரைத்தேன் சேதுபதி யெனுநாமஞ்
 சேர்ந்துள் ளேனே. 11.

(தொடர்ச்சி 12-ம் பக்கம்)

★ மனத்தூய்மை அடைந்தவன் பாக்கியசாலி ★

முற்றுடர்;

சித்த வைத்தியம்

# குப்பைமேனி

இம் மூலிகை தன்பெயருக்கேற்பக் குப்பைகளில் அதிகமாக உண்டாகி வளரும். இதற்குக் குப்பைமணி, அரிட்டமஞ்சரி, அண்டகம், அரிபஞ்சரி, தனிவலிப் பெருமாள், தெருவிலழகு, பூனைவணங்கி, முறைமயக்கி, மேனி, பயிவீயம், மயிலம் முதலிய பெயர்களும் உண்டு. இது குத்துக் குத்தாக உண்டாகிச் செடியாய் எங்கும் வளரும். இதில் பூத்தசெடிகளே மருந்துக்கு உபயோகமானவையாகும். இதில் தங்கச்சத்து வேண்டியளவு உண்டென்று சித்தர்கள் கூறியுள்ளார்கள்.

குப்பைமேனியைப் பலவிதமாக உபயோகிக்கலாம். இதை வேருடன் பிடுங்கிச் சமுவி நறுக்கி நிழலில் உலர்த்தி நீரிலிட்டு இராமுழுதும் ஊறவிட்டு, மறுநாள் வடித்து எடுத்து உலரவிட்டு, மீண்டும் இரவில் நீரில் ஊறவிட்டு மறுநாளும் வடித்து உலர்த்தி மீண்டும் மீண்டும் இதனைப் பதது நாள்கள் இது செய்து, நன்றாக உலர்ததியபின் இடித்து அரித்து எடுததுக்கொளளவும். இச்சூரணத்தை வேண்டும் போது சர்க்கரையுடன் சேர்த்துக் காலை மாலை சாப்பிடவும்.

இதனால் மண்டைக்குத்து, தேமல், குட்டம், இளநரை நீங்கும். இதனை உண்ணும் காலத்தில் உணவுவேளைகளில் பால், தயிர் அதிகம் சேர்த்தல் நன்று. இன்னும் இதனால் கபம், குன்பம், சகலவிஷம், பல்வலி, பீனிசம், மூலம், வாதம் என்பனவும் குணமாகும்.

காதுக்குள் பூச்சி முதலியன புகுந்தால் குப்பைமேனிச் சாற்றில் இரண்டு மூன்று துளிவிட்டால் பூச்சி இறந்து விடும்.

இது வாதம், கபம் ஆகியவற்றைப் போக்குவது. இதை ஆமணக்கு நெய்யில் தாளிதஞ்செய்து உண்டால் நல்லது. குப்பைமேனியை அவித்து உண்பதால் இரத்தம் உடல் முழுவதும் பரவுவதோடு உடம்பு வலிமை பெறுவதும் உண்டு.

## சுன்னுகத்தில் சிறுகைத்தொழிற் பேட்டை

சுன்னுகம் புகையிரத நிலையத்துக்கு அண்மையில் உள்ள பெரு நிலப்பரப்பில் இன்று நிலவிவரும் தச்சுவேலை, நெசவு வேலை முதலியவற்றோடு அண்மையில் பன்னவேலையும் ஆரம்பிக்கப்பெற்றுள்ளது. சிறுகைத்தொழில் புடைவைக் கைத்தொழில் திணைக்கள உதவிப்பணிப்பாளர் விசுவலிங்கம் எடுத்துக்கொண்ட முயற்சியால், ஊரவரின் அபிமானத்தால், பெண்கள் சிறுமியரின் ஊக்கத்தால் இந்நிலையம் பரந்து விரிந்து பலதுறைகளிலும் பொருளாதார வாய்ப்பை நல்க உதவியாயிருக்கும். இப்பகுதிப் பாராளுமன்றப் பிரதிநிதி தருமலிங்கம் அவர்கள் சமுகமளித்து ஆதரவு பெற்றுத் தருவதாகப் பேசிய பொதுக்கூட்டத்தில் 13-1-80 மாலை மில்க்வைற் தொழிலதிபர். பனையோலை வாரும் இயந்திரம் ஒன்றை அன்பளிப்புச் செய்து மாதர் பணியைப் பாராட்டிப் பேசினார்.

முற்றுடர்:

## கண்டதும் கேட்டதும்

129. சொர்க்கத்துக்குத் திறப்பு பிரார்த்தனை என்றால் பிரார்த்தனைக்குத் திறப்பு தூய்மை.

130. அன்பால் ஊக்கம் அளிக்கப்பெற்று, அறிவினால் வழிகாட்டப்பெற்றதே சிறப்பான வாழ்வு.

131. நண்பர்களிடம் மட்டுமன்றிப் பகைவனிடமும் அன்பு காட்டு. நீ நடக்கும் வழியில் முள்ளைப்போடுவோர் வழியில் நீ பூவைப்போடு.

132. பெரிய விஷயங்களைப்போலவே சிறிய விஷயங்களையும் கவனிக்கக்கூடிய மனமே உண்மையும் உரமும் கொண்ட மனமாகும்.

133. தாழ்ந்த இலட்சியத்தில் வெற்றிபெறுவதைவிட, உயர்ந்த இலட்சியத்தில் தோல்வியுறுதல் மேலானது.

134. நீ எண்ணுவது எல்லாருக்கும் சொந்தம் நீ உணர்வதே. உனக்குச் சொந்தம்.

135. ஒருபொழுதும் துன்பமாக மாறாத பொருள், நாம் செய்யும் நற்செயல் ஒன்றே.

## நூலகவியற் கருத்தரங்கு

இலங்கை நூலகச் சங்கம் நடாத்தும் நூலகவியற் கருத்தரங்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இராமநாதன் மண்டபத்தில் சென்ற 19-1-1980 சனிக்கிழமை மிகவும் அருமையாக நடைபெற்றது. நூலகத்துறை நிபுணர்கள் தென்னிலங்கையினின்றும் வந்தும் உரையாற்றினார்கள். நூல்களைப் பேணுவதும், அவற்றைப் போற்றிப் படிப்பதும் நாம் இன்னும் பழகவேண்டிய பழக்கங்களாகும். நூலகங்களில் நூல்களைக் கையிலேந்திக்கொள்ளும் முறை, அவற்றை அழுக்குப்படுத்தாது, அவற்றிற் கீறுகள் குறிப்புக்கள் எழுதாது, மை தெளித்து அபிடேகம் பண்ணாது, வெட்டிக் கிழிக்காது மெதுவாகப் பயன்படுத்துவது ஒரு கலை. பண்பாட்டின் வெளிப்பகர்ப்பு.

## ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகளும் பெரியபுராணமும்


ஆறுமுகத்தப்பிரான் என்னும் பெயரில் பலர் இருந்தார்கள், ஆனால் ஆறுமுகத்தப்பிரான் சுவாமிகள் என்பவர் ஆறுமுகநாவலரவர்களின் மாணவரில் ஒருவர். அவர் பெரியபுராணத்தில் பெரிதும் ஈடுபாடுடையவராய் அதற்கு அருமையான உரை எழுதியுள்ளார். அதுவே முதலில் எழுதப்பட்ட அளவான, அழகான, அருமையான உரையாகும். அதனைத் தமிழ் நாட்டு மடாதிபதிகளும் மகா வித்துவான்களும் புலவர்களும் நன்கு மதித்துவுளார்கள்.

கடவுள் புலன்களுக்கப்பாற்பட்டவர்; ஆனால் நீங்கள் உங்களையே புலன்களிலிருந்தும் அவற்றின் விடயங்களிலிருந்தும் பின்னிழுத்துக் கொள்ளின் நீங்கள் அவரை அனுபூதியடையலாம். அறிந்து உணரலாம்.

— சுவாமி சிவானந்தர்

★ உலகப் போராட்டங்கள் சுயநலத்தில் உருவானவை ★

முற்றொடர் :



## சூரியநமஸ்காரம் செய்வோம்

வைகறைப் பொழுதில் நித்திரை விட்டெழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு நீராடித் தூய்மையான உடைகளைத் தரித்து உதயசூரியனை வழிபடும் உபாசனையே சூரிய நமஸ்காரமாகும். சூரியனுக்குரிய நாளாகிய ஞாயிற்றுக் கிழமையில் நமஸ்கார்ரஞ் செய்தல் விசேடமாகக் கருதப் படுகிறது.

இவ்வழிபாட்டில் ஒளி தேவனைக் கலசத்தில் ஆவாகனஞ் செய்து வழிபடல் சிறப்பாகக் கருதப்படுகிறது. சூரிய பகவானைத் தியானிக்கும்போதும் பிரார்த்திக்கும்போதும், சாயா ஸம்ஜ்ஞாசமேத ஸ்ரீ சூர்ய நாராயண சுவாமிநே நம: என்று தேவியர்கள் இருவருடன் கூடியவராகவே வழி படுதல் வேண்டும்.

சூரிய நமஸ்காரம் செய்பவர்களுக்கு சாயா, சம்ஜ்ஞாவுடன் கூடிய சூரிய நாராயணர் ஒளிபடைத்த கண்களையும், உறுதிகொண்ட நெஞ்சினையும் அருள்வர். சூரியனுக்கு எருக்கிலை விருப்பமானதால் எருக்கிலைகொண்டு நீராடும் வழக்கம் உண்டென்பர்.

தை மாதத்தின் முதல்நாள் தேவர்களுக்கு விடியற் காலை எனப்படும். அன்று சூரியன் மகரராசியில் பிரவேசிக்கும் சங்கிராந்தியாகும். அன்று காலையில் சூரிய பகவானுக்குப் புதுப்பானையில் தூய்மையாகப் பொங்கிப் படைத்து வழிபடுதல் பழைய வழக்கமாக நிலவிவருகின்றது.

சூரிய நமஸ்காரத்தைப்போல் பயன்தரும் அப்பியாசம் வேறெதுவும் இல்லை என்பர். அது உடலில் எல்லா உறுப்புக்களுக்கும் உறுதி அளிக்கிறது. சரீர நாடிகளை ஒழுங்காக்கி இரத்த ஓட்டத்தை நன்கு அமைக்கின்றது. மந்திரங்களையும் நினைத்துக்கொண்டு அப்பியாசங்களைச் செய்வதால் ஆத்மசக்தியுண்டாகிறது. சூரியநமஸ்காரஞ் செய்பவர் சுத்தமான உணவுகளை அளவறிந்து உண்ணல் நன்று.

சாதகர்கள் தினந்தோறும் காலை ஐந்துமணிக்கு முன் நித்திரைவிட்டெழுந்து காலைக்கடன்களை ஒழுங்காகச் செய்தபின் 5-30 அளவில் வழிபாட்டை ஆரம்பித்து இருபது நிமிட நேரத்தில் செய்து முடித்துவிட்டுப் பத்து நிமிட நேரம் ஓய்வு எடுக்கலாம்.

## அரைக்கீரை

அரைக்கீரையை அறைக்கீரை எனவும் வழங்குவர். சிலர் இதைக் கத்திகொண்டு அறுத்துக்கொள்வதும் உண்டு. இதனால் இதை அறுகீரை எனவும் கூறுவர். வெட்டிய பின் அடித்தண்டிலிருந்து இலைகள் உண்டாகி இக்கீரை மீண்டும்வளர்வதுண்டு. இது சுலபமாக எங்கும் கிடைப்பது.

அரைக்கீரை கபநோய், காய்ச்சல், குளிர், சன்னி முதலிய நோய்கள் வந்தவர்களுக்கும் இக்கீரையைப் பத்தியமாகக் கொடுப்பர். இது காமத்தை அதிகரிக்கும் தன்மையுள்ளது என்பர். இது உடம்புக்கு மிகவும் நல்லது என்றும், இதில் உயிர்ச்சத்துகள் ஏ, சி என்னும் இனங்கள் உள்ளன. குளிர்ச்சியைத்தந்து தாதுவை வளர்க்கும் இக்கீரை வாயுவைப் போக்குவது. இக்கீரையை நன்றாகக் கழுவுதல் வேண்டும்.

மிகுந்த சுவையுள்ள அரைக்கீரையின் விதைகள் மிகவும் உபயோகமானவை. இவற்றை மாவாக்கி உணவுகள் செய்வதும், எண்ணெய் பிழிந்து கொள்வதும் உண்டு. இக்கீரை மூல நோயாளிகளுக்கு ஆகாது என்று வைத்தியர்கள் கூறுவர்.

இதைப் புளியிட்டுச் சமைப்பது வழக்கம். ஆனால் மிளகுசேர்த்து நெய்கலந்து உட்கொண்டால் தாதுவளரும்.

காய்ச்சல் குளிர்சன்னி கபநோய் பலபிணிக்கும்
வாய்ச்ச கனியாய் வழங்குங்கள் — வீச்சாயக்
கறுவுமோ வாயுவினம் காமமிகவுண்டாம்
அறு கீரையைத் தின்றறி.

## தென் அல்வாய் சிறுவர் பாடசாலை

வடமராட்சியைச் சேர்ந்த மாலி சந்தை என்னும் இடத்திலுள்ள விநாயகர் ஆலயத்தின் அருகில் அமைந்துள்ள சனசமூகநிலையத்தைச் சேர்ந்த சிறுவர் பாடசாலை ஒன்று விரைவில் உருவாகப்போகிறது. அதற்கான அடிக்கல்லை நாட்டிய தொழிலதிபர் கனகராசா, சனசமூக நிலையத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் மூவர்ணப் படத்தையும் திரைநீக்கஞ்செய்து வைத்தார். சனசமூகநிலையத்தார் நடத்திய திருமுறைப்போட்டி, பேச்சுப் போட்டி ஆகியவற்றில் திறமைகாட்டிய பிள்ளைகளுக்குப் பரிசுகளும் உதவி அவற்றை அளித்துச் சிறப்பித்தார். விழாவில் அரசாங்க உதவி அதிபர் தம்பிமுத்து விருந்தினராகக் கலந்து சிறப்புரை ஆற்றினார்.

கடவுள் உங்கள் உயிரின் உயிராக இருக்கிறார்; ஆனால் நீங்கள் அவரை உணர்வதில்லை; ஏனெனில் நீங்கள் உங்கள் இருதயக் கதவுகளை மூடி, எண்ண முடியாத ஆசைகளாலும் வாஞ்சைகளாலும் பலப்படுத்திவிட்டீர்கள்.

— சுவாமி சிவானந்தர்

★ **சுயநலத்தைவிடப் பெரிய பாபம் இல்லை** ★

# வன்னியர் நினைவு

குளக்கோட்டன் என்னும் இளவரசன் கிழக்கிலங்கையிற் குடியேறுவதற்குத் தமிழ் நாட்டிலிருந்து பயிற்சிபெற்ற நல்லகுல வேளாளரான வன்னியரைப் பெருந்தொகையாக வரவழைத்து இற்றைக்கு 1500 ஆண்டுகளுக்கு முன்னரே குடியேற்றினான். அக்காலத்தில் ஐந்தாம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்திலேயே திருக்கோணமலைத் திருக்கோயிலை அவன் புனருத்தாரணஞ் செய்தான் என்பது வரலாறு.

குளக்கோடடனை அடுத்து ஆட்சிபுரிந்தவர்களுள் சிங்கள மன்னர்களும் சிவப்பிராமணரை முன்னிட்டுத் தங்கள் நாளாந்த வழிபாடுகளுக்காகச் சைவக் கோயில்களை அமைத்தும் ஆதரித்தும் சைவக்கிரியைகளைப் பின்பற்றிக் கன்மானுஷ்டானங்களைச் செய்து வந்தார்கள் என்று அறியக் கிடக்கிறது. சிங்கள மன்னர் பலர் சிவன் எனத் தமக்குத் திருநாமம் தரித்து அரசாண்டதும் உண்டு. பாண்டுராசன் முதலாக ஐந்து தமிழக மன்னர் இலங்கையை அறுபத்திரண்டு ஆண்டுக்காலம் அரசாண்டபோது, அநுபவம் மிக்க வன்னியர்கள் தம்பலகாமத்தை அழகு நகரமாக அமைத்தார்கள். மகாவம்சம் என்னும் சிங்கள வரலாற்றுப் புகழ்பெற்ற மகாநாமனின் மருகனான தாதுசேன மன்னன் தமிழரசரின் ஆதிக்கத்தை அகற்றினான் என்பதும் அறிய வேண்டியதொன்று. புகழ்பெற்ற தாதுசேனன் புற்றீசல் போலப் புலம் பெயர்ந்துவந்து இலங்கையிற் குடியேறிய தமிழரைத் தடுக்கவியலாது கலப்பு மணத்தைக்கூடக் கவனிக்காதிருந்தான். தாதுசேனனின் பட்டத்து மனைவியின் மைந்தன் மொகலன் பதினெட்டு ஆண்டுக்காலம் தமிழ்த் துறவி வேடந்தாங்கி இந்தியாவெங்கும் சுற்றித்திரிந்தபின் இலங்கைக்கு மீண்டு காசியப்பனுக்குப்பின் அரசாண்டான் என்பது தெரிந்ததே. அவனை அரியணையேற்றியவரும் தமிழ் வீரரேயாவர். இது நடந்தது கி. பி 495-ஆம் ஆண்டளவிலாகும்.

முன்சொன்ன பாண்டுராசன் என்பவன் புத்தசமயத்தை வெறுக்காது அதனையும் போற்றிப் பாதுகாத்தவன். அவன் ஆணையின் வண்ணமே யாழ்ப்பாணத்துக் கிரிமலைக்கேணிக்கு அண்மையில் வாழ்ந்த ஒரு கூட்டத்தார் இடம்பெயர்ந்து, மட்டக்களப்பில் வலையிறவு முதலிய இடங்களில் குடியேறினார்கள்.

பாண்டுராசன் பரிபாலனஞ் செய்த காலத்திலேதான் குளக்கோட்டன் என்னும் சோழ தேசத்து இளவரசன் திருக்கோணமலை நாதரைக் கும்பிடவந்தான். குளக்கோடடன் தன் தாய் தந்தையருக்குத் திருக்கோணேஸ்வரப் பெருமான் திருவருளாலேயே பிறந்தான் என்பதும் அறியக் கிடக்கிறது. குளமும் கோட்டமும் கோயிலும் சுனையும் கட்டியவனாதலால் குளக்கோட்டன் என்னும் காரணப் பெயர் பெற்றவன் இவன். இவனே திருக்கோணேஸ்வரத்தை வரலாற்றுக் காலத்தில் புனருத்தாரணஞ் செய்தவன். இவன் அமைத்த கோயிலையும் சுனையையும் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் தமது தேவாரத் திருப்பதிகமொன்றில் பாடியருளியுள்ளார்.

குளக்கோட்டன் புனருத்தாரணஞ் செய்த திருக்கோணமலை நாதருக்கு அயலில் உள்ள தம்பலகாமத்து நெல்வயல்களை உருவாக்கி அவற்றுக்கு நீர் பாய்ச்சுவதற்குப் பல குளங்களை ஒன்றிணைத்து இருபது மைல் சுற்றளவுள்ள கந்தளாய்ப் பெருங் குளத்தையும் கட்டினான் என்பர்.

குளக்கோட்டன் அழைப்பிற்கிணங்கி முதலில் வந்த ஐம்பத்தொரு வன்னியர் குடும்பங்கள் ஏழு தலைவர்களின் கீழமர்ந்த இடங்கள் இலங்கையின் வளமிக்க வன்னி நாடாயிற்று. அவர்களின் பின்வந்த அறுபது குடியினரும் அவர்களைப் பின்தொடர்ந்து வந்தவர்களுமே மேற்கிலங்கையில் கற்பிட்டி தொடக்கம் பூநகரி வரையும், கிழக்கிலங்கையில் கொட்டியார் முதல் முல்லைத்தீவு வரையும் குடியேறியிருந்தனர்.

திருக்கோணமலையில் தங்கிய வன்னியர், மட்டக்களப்பு பதுளை, அநுரதபுரம், குருணாகல் முதலான இடங்கள் எங்கும் பரவியிருப்பாராயினர். அவர்கள் சென்றவிடமெல்லாம் திருக்கோயில்களை அமைத்தும் திருக்குளங்களைக் கட்டியும் மக்களுக்கு வாழ்வளித்தார்கள். வன்னியர் நாடெங்கும் விநாயகர், ஐயனார் ஆலயங்கள் அமைந்துள்ள அடையாளங்களை இன்றும் அவற்றின் அழிபாடுகளிலிருந்து அறியலாம்.

வன்னியர் தலைவர்களின் இருப்பிடங்கள் தலைநகரங்கள்போல் ஓமந்தை, முல்லைத்தீவு, தம்பலகாமம், கற்பிட்டி பூநகரி முதலிய பிரதேசங்களில் அமைந்தன கீர்த்திமிக்க பண்டாரவன்னியனின் பனங்காமம் துணுக்காய் என்னும் பிரதேசத்தில் ஒளி வீசிக்கொண்டிருந்தது. அவன் வழிவந்த சேனாதிராசனும் இவன் புதல்வி கதிரிநாச்சனும் மிகுந்த செல்வாக்குடன் ஒல்லாந்தர் காலத்தில் புகழ்மணக்க வாழ்ந்தனர்.


எத்திசையும் புகழ்மணக்க இலங்கையில் அரசு வீற்றிருந்த எழில்மிக்க வன்னியர்கள் எல்லாவகையாலும் பண்பாடுள்ளவர்கள். நன்றிமறவாத நாயகர்கள். சாதாரண வாழ்வு வாழ்ந்து உயர்வுள்ளங் கொண்டவர்கள். அவர்களுட் பலர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் நாலாபக்கங்களிலும் நல்ல குடும்பங்களில் திருமணஞ் செய்தவர்கள். நவாலி, தொல்புரம், சுழிபுரம், மூளாய், அராலி, சங்கானை, இருபாலை, கோப்பாய், உடுப்பிட்டி, மறவன்புலம், கோயிலாக்கண்டி, தெல்லிப்பழை முதலிய இடங்கள் வன்னியர் சம்பந்தமுள்ளனவாகும்.

பூநகரியில் புகழ்பூத்த நல்ல மாப்பாண வன்னியனார் யாழ்ப்பாணத்தில் வைத்திலிங்கச் செட்டியார் தம்மைப் பிணை எடுத்த நன்றியை நெஞ்சிற்பதித்து அவர்கட்டிய வண்ணைச் சிவன்கோயிலுக்கு வேண்டிய பனை மரங்கள் யாவற்றையும் உபகரித்ததோடு கோயிற் பரிபாலனத்துக்குப் பூநகரியில் பெரு நிலப்பரப்பைத் தருமசாதனஞ் செய்து கொடுத்தவர்.

## சர்வோதயம்

புங்குடுதீவில் அலுவலகம் அமைத்துத் தீவுப்பகுதிகளுக்கு மாத்திரமன்றிக் குடா நாட்டிலும் பலபகுதிகளில் பரவலாகப் பணி புரிந்துவரும் சர்வோதய இயக்கத்தின் சேவைகளைத் தொழிலதிபர் பாராட்டி அவ்வப்போது உதவி ஒத்தாசை உபகரிப்புக்கள் செய்து வருவது வழக்கம். அண்மையில் அவர்களுக்குத் தேவையான பல நூல்களைத் தொழிலதிபர் உபகரித்து அவர்களை வாழ்த்தினார்கள்.

**மனபரிபாகத்துக்கு ஏற்பப் பெருமை சிறுமை வருகின்றன**



# தம்பலகாமம் கும்பாபிஷேகம்

திருமூலநாயனுர் சிவபூமி எனப் போற்றிய ஈழவள நாட்டின் கிழக்குப் பிரதேசத்திலே திருஞானசம்பந்தப் பெருமான் தேவாரம் பாடியருளிய சிறப்பும், அருணகிரி நாதர் திருப்புகழ் பாடியருளிய மேன்மையும் பொருந்திய திருக்கோணமலைச் சூழலில் உள்ள ஆதி கோணை நாயக சுவாமி ஆலயம் என்னும் தம்பலகாமச் சிவன் கோயில் அதியற்புதமானதும், திருவருள்மயமானதுமாகும். அங்கே கோயில் கொண்டருளிய ஹம்சகமனும்பிகாதேவி சமேத ஆதிகோணைநாயக சுவாமியின் திருவருள் விலாசம் பெரிதாகும்.

ஈஸ்வரன் என்னும் பட்டப் பெயர் பெற்ற மகா பராக்கிரமசாலியும் சிவபக்த சிரோமணியுமான இலங்கேஸ்வரன் என்னும் இராவணனுற் புகழ்பெற்றதும், கண்தழை என்னும் கந்தளாய் வாவியினுல் வளம்பெற்ற நெற்களனிகள் சூழவுள்ளதுமான திருப்பதியிலே, முன்னர் குளக்கோட்டு மகாராசாவினுற் புதுப்பிக்கப்பெற்றுப் பொலிவுற்ற ஆதிகோணைநாயகசுவாமி திருக்கோயில், இடைக்காலத்திற் பழுதடைந்து கிடந்தபின் இன்று பன்முகமாகப் புனருத்தாரணம் செய்யப்பெற்றபின், புதுப் பொலிவும் பேரழகும் பெருஞ்சாந்நித்யமும் பெற்றுப் பேரருள் கொழிக்கின்றது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூவகைச் சிறப்புக்களும் பொருந்திய முதுபெருஞ் சிவாலயத் திருப்பணிகள் முற்றுகச் செய்து முடிக்கப் பெற்றபின் இன்று சிவலோகம் எனத் திருவொளி வீசுகிறது.

ஆலயத்தின் கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம், மகா மண்டபம், ஸ்நபனமண்டபம், ஸ்தம்பமண்டபம், நமஸ்காரமண்டபம், வசந்தமண்டபம் முதலான பலவகை மண்டபங்களும், யாகசாலை, பாகசாலை, களஞ்சியம், காரியாலயம் முதலிய பல்வேறு அங்கங்களும், விமானம், கோபுரம், மணிக்கோபுரம், திருச்சுற்று முதலியன யாவும் ஆகமவிதிகளுக்கமையப் புதுக்கி அமைக்கப்பெற்றுள்ளன. பச்சைப்பசேலெனப் பசுமை மாருது விளங்கும் பரந்த நெற் களனிகள் அன்னை பராசக்தியின் திவ்விய திருக் கோலத்தைக் காட்டுவன. அவளின் அரவணைப்பில் அமையும் எம்பிரான் திருக்கோலம் போல இராஜகோபுரம் வெகு தூரத்துக்கப்பாலேயே துலாம்பரமாகக் காட்சி தருகின்றது.

அம்மையப்பரின் அழகிய சந்நிதிகளையன்றி ஆங்கே பரிவார தெய்வங்களாக எழுந்தருளியுள்ள விநாயகர், முருகன், வைரவர், சண்டேஸ்வரர் முதலானேர் சந்நிதிகளும், நவக்கிரக ஆலயமும் அருமையாக அமைந்துள்ளன.

இவ்வாருக இத்திருக்கோயிற் கும்பாபிஷேக வைபவத்துக்கான பூர்வக்கிரியையாதியன ஆகமப் பிரமாணங்களுக்கமையச் சித்தார்த்தி ஆண்டு தை மாதம் பத்தாம் நாளுக்குச் சமமான (24-1-80) வியாழக்கிழமை காலை ஆரம்பித்து; அனுஞ்ஞாஷ்டகம், விநாயக வழிபாடு, ஆசாரிய வரணம், தனலட்சுமி பூசை, தனுகர்ஷண மந்திர ஹோமம், திரவிய விபாகம், கணபதி ஹோமம், பிரமசாரீபூஜை, ஸ்தூபிதாபனம், கோவாசம், புதிய மூர்த்திகளின் கண் திறத்தல், தான்யாவாசம் ஜலாதிவாசம், திசாஹோமம், ரக்ஷோக்னஹோமம், பிரவேசபலி, கிராமசாந்தி, சயனுரோகணம், நியாசங்கள் முதலியனவும் பிறவும் முறையாகச் செய்யப்பெற்றன.

அடுத்தநாள் வெள்ளிக்கிழமை நவக்கிரகஹோமம், விப்ரோச்சிட்டம், உத்தமவாஸ்துசாந்தி என்பனவும்; அடுத்தநாள் சனிக்கிழமை பல்வேறு புண்ணிய தீர்த்தங்கள் பாலாவி பாவநாசம், மாணிக்க கங்கை முதலான இடங்களிலிருந்து எடுத்துவரப்பெற்றதைத் தொடர்ந்து இடபத்துவஜபூஜை, சூரியாமாக்னி சங்கிரஹணம் மிருத் சங்கிருஹணம் என்பன செய்யப்பெற்றபின்; அன்று மாலை அங்குரார்ப்பணம், சிவாசாரியர்கள் கங்கணதாரணம், கடஸ்தாபனம், பிரசன்னுபிஷேகம், பிரசன்ன பூஜை, லயபோக அதிகாரங்க கலாகர்ஷணம், முப்பத்து மூன்று குண்ட அக்னி காரியம், பிரதான கும்ப யாகசாலைப் பிரவேசம், சுமங்கலி பூசை, தீபஸ்தாபனம், தீபாராதனை, சதுர்வேதபாராயணம் பன்னிரு திருமுறைப் பாராயணம், என்பன நடைபெற்றன. பின்னர் அன்று நள்ளிரவில் யந்திர, விம்ப, ஸ்தாபனம், அஷ்டபந்தனம் முதலியன நடைபெற்றன.

அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமை காலை சிவாசாரியர்கள் சந்தியா அனுஷ்டானம், பரிவாரயாகபூசைகள், பிரதான யாகபூசை, முப்பத்து மூன்று குண்ட அக்னிகாரியம் என்பனவும்; விஷேச திரவிய ஹோமம், தீபாராதனை, வேதஸ்தோத்திரம், திருமுறை பாராயணம், கீதவாத்திய நிர்த்த உபசாரங்கள் முதலியன நடைபெற்றன, அன்று மாலை சிவாசாரியர்கள் சந்தியானுஷ்டானம், பரிவாரயாக பூசைகள், விம்பசுத்தி, ரக்ஷாபந்தனம், சகள நிஷ்கள சடத்துவநியாசம், பரிவாரமூர்த்திகள், ஸ்பர்சாகுதி, முப்பத்து மூன்று குண்ட அக்கினி காரியம், தீபாராதனை வேதாதி உபசாரங்கள் முதலியன நடைபெற்றன.

பின்னர் கும்பாபிஷேகநாளான 28-1-1980இன் சோமவாரமும் மிருகசிரிட நட்சத்திரமும் மீனலக்கினமும் பொருந்திய சுபவேளையில் முற்பகல் 10 மணி 11 நிமிஷம் முதல் 11 மணி 02 நிமிஷம் வரை வாய்த்த சுபமுகூர்த்

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்)

★ உயிருக்கு நிலைபேறு தருவது அன்பு ★

# நாவலர் நினைவுகள்



பேர்சிவல் பாடசாலை எனவழங்கிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் 1834-ஆம் ஆண்டில் தமது பன்னிரண்டாம் வயதில் சேர்ந்த ஆறுமுகம் அங்கே ஏழாண்டுகள் ஊக்கத்தோடு கற்றுப் பத்தொன்பதாம் வயதளவில் தலைசிறந்த மாணவனுயும் தமிழறிஞனுயும் இருப்பக்கண்ட கல்லூரி அதிபர் பீற்றர் பேர்சிவல் அவரை அக்கல்லூரியிலேயே ஆசிரியராக நியமித்ததோடு, தமக்கும் பண்டிதராக — தமிழாசிரியராக — தமது ஆஸ்தான வித்துவாஞக — குருவாக வரித்துக்கொண்டார். எனவேதான் ஆறுமுகம் ஆசிரியர் சைவக்கோலத்துடன் கல்லூரிக்குச் செல்லும் நியமத்தைப் பாதிரியாரராய பேர்சிவல் மனநிறைவோடு சகித்துக்கொண்டுவந்தார்.

சைவப் பெரியார் ஆறுமுகம் அவர்கள் அழகொழுக ஆங்கிலம் பேசுவதிலும் சுத்தச் செந்தமிழ் பேசுவதிலும் எழுதுவதிலும், ஆங்கிலத்தைத் தமிழ்ப்படுத்துவதிலும் தமிழை ஆங்கிலப்படுத்துவதிலும் தலையாயவராய் எவரும் தமக்கு இணையில்லாதவராயத், தாமுண்டு தம் கடமையுண்டு என்று மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் தம் பணியை மேலதிகாரிகளும் மாணவர்களும் மெச்சும்வகையில் செய்துவந்தார்.

பாதிரியாருக்குப் பண்டிதராயிருந்த முறையில் அவர் வேண்டுகோளுக்கிணங்கிக் கிறிஸ்தவ மத நூலாகிய பைபிளை மொழிபெயர்த்து வந்தார். இங்ஙனம் பாடசாலை ஆசிரியராயும் பாதிரியாரின் பண்டிதராயும் பணியாற்றி வந்த காலத்திலேதான் அவர் படிப்பார்வம் மிக்கவராய், வடமொழிவல்லாரபாற் சென்று அம்மொழியினையும் நன்கு கற்று அதனுதவியால் வேதாகமங்கள், உபாகமங்கள், உபவேதங்கள், புராணேதிகாசங்கள், மெய்கண்ட சாத்திரங்கள், பண்டாரசாத்திரங்கள் ஆகிய சைவசமய நூல்களையும் நன்கு கற்றுத் தமது இருபத்திரண்டாம் வயதளவில் பேரறிஞராய் விளங்கினர்.

இங்ஙனம் பேரறிஞராய் விளங்கிய சைவப் பெரியார் தம்மளவில் சைவத்தையும், தமிழையும் வளர்க்க விரும்பித் தமது இருபத்து நான்காம் வயதில் 1846ஆம் ஆண்டு தை மாதம் முதலாகச் சில மாணவர்களைத் தம்மிடம் அழைத்து எவ்வித வேதனமும் வாங்காமல் அவர்களைச் சைவத்துறையில் பயிற்சி அளிப்பதற்கான வகுப்புகளை அதிகாலையிலும் இராத்திரியிலும் நடத்தி வந்தார். அவருடைய ஆரம்ப வகுப்பிலே சேர்ந்தவர்களுள் நல்லூர் கனகசபாபதி என்பாரின் மைந்தன் சதாசிவம்பிள்ளை, சுவாமிநாதஐயர், நடராசஐயர் என்னும் அந்தணச் சிறுரர்கள் இருவர் ஆறுமுகச் செட்டியார் முதலானேராவர்.

சைவப்பெரியாரின் முதல் மாணவர்களுள் சதாசிவம் பிள்ளை என்பார் தம்மாசிரியப் பிரான்வழி அடிபிசகாது நடந்ததோடு அவருக்கு அணுக்கத்தொண்டராய், அந்தரங்க செயலாளராய், அவரைப்போல நைட்டிகப் பிரமசாரியார், அவர் பணிகளைக் கருத்தூன்றிச் செய்து வந்தவர். வைரவநாதர் ஆறுமுகப்பிள்ளை என்பார் தமக்கு வாய்த்த வெள்ளி திசையினல் பெரும் பொருளீட்டித் தம் ஆசிரியர் பணித்தவாறு தானதருமங்கள் செய்து வந்ததோடு, கோயில் திருப்பணிகளும், பொதுநலசேவைகளும் செய்துவந்தவர். தம் ஆசிரியரை நியமமாக அட்டாங்கமாக நமஸ்கரித்து அடங்கி வாழ்ந்தவர். தம்மாசிரியரின் நூல்களை யாழ்ப்பாணத்தில் வெளியிடுவதற்கு முனைந்து சைவப்பிரகாச யந்திரசாலை என்னும் அச்சகத்தை நீராவியடியில் நிறுவியவர். அதில் அச்சிட்டு வெளியிட்ட நூல்களுள் கந்தபுராணம் இரண்டாம் பதிப்பு 1883ஆம் ஆண்டில் அவர் பெயரால் வெளிவந்துள்ளது ஒன்றே இன்று சான்ருகக் காணக்கூடியதாக உள்ளது. அவர் நிறுவிய அச்சுக்கூடம் பிற்காலத்தில் 1888ஆம் ஆண்டுக்கு மேல் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்கு அன்பளிப்பாக வழங்கப்பெற்றது.

---

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

## தம்பலகாமம்.......

தத்தில், ஐவகைச் சுத்திசெய்து அந்தணப் பெரியார்கள் பலர் திக்கெட்டும் திருவருள் பொழியுமாறு துதித்து அவி சொரிந்து, ஆகுதி நிறைவுசெய்து, பூசிக்கப்பெற்ற மஹா கலசாமிர்த தீர்த்தக்குடங்களைத் தூக்கி; வேதம், கீதம், தோத்திரம், சங்கு, மங்களவாத்தியங்கள் எங்கும் முழங்க ஆயிரக்கணக்கான அன்பர்கள் அடியார்நள் ''அரஹர'' வென அரன் திருநாமத்தை ஒலிப்ப மஹா கும்பாபிஷேக தாரைகள் திருவருளாமெனப் பொழிய விண்ணுலகத்தவரும் மண்ணுலகத்தவரும் தமக்கு வாழ்வளிக்கும் அமுத தாரைகள் என ஏந்தி அகமும் புறமும் பூரித்து உய்தி பெற்றூர்கள்.

---

# அருள் விருந்து ❋❋❋❋

### ஆதாரம் — தர்மசக்கரம்

வாழத்தெரிந்தவனுக்குத் துயரம் உண்டாவதில்லை.
ஒருவனின் பண்பாட்டைப் பேச்சில் அறியலாம்.
கடவுளை அறிந்தவன் எல்லோர்க்கும் அடியவன்.
கல்நெஞ்சனிடமும் மெல்லியல்பு தென்படுவதுண்டு.
முகமலர்ச்சி அகமலர்ச்சிக்கு அடையாளம்.
வேற்றுமை உணர்வு பயத்தை உண்டுபண்ணும்.
தான் செய்த பிழையை மனச்சாட்சிக்கு மறைக்க முடியாது.
நல்லனவற்றைச் செய்வதால் மனமகிழ்ச்சி உண்டாகும்.
சுகமும் துக்கமும் அகங்காரத்தின் விளைவுகள்.
சுயநலக்காரனுக்கு மெய்ஞ்ஞானம் வாய்க்காது.
தத்துவங்களை அறிந்தவனுக்கு அமைதி உண்டாகிறது.

---

### மநுதர்மம்

#### உடல் அழுக்குகள்

வியர்வை, வீர்யம், சவர்நீர், உதிரம், சிறுநீர், மலம், காதுக்குறும்பி, நகம், அழுக்கு கண்ணீர், பீளை, சுண்டு.

---

**வாழ்க்கையின் தத்துவத்தை அறிந்தவன் வாது செய்வதில்லை**

*( Continued from the last issue )*



## Sadhana Tattwa or The Science of Seven Cultures

— Swami Sivananda

### Heart Culture

15. Doing good to others is the highest religion. Do some selfless service for a few hours every week, without egoism or expectation of reward. Do your woredly duties in the same spirit. Work is worship. Dedicate it to God.

16. Give two to ten percent of your income in charity every month. Share what you have with others. Let the world be your family Remove selfishness.

17. Be humble and prostrate yourself to all beings mentally. Feel the Divine Presence every where. Give up vanity, pride and hypocrisy.

18. Have unwavering faith in God, the Gita and your Guru. Make a total self-surender to God and pray, "They will be done, I want nothing". Submit to the Divine will in all events and happinings with epuani mity.

19. See God in all beings and love them as your own self. Do not hate anyone.

20. Remember God at all times or, at least on rising from bed, during a pause in work, and before going to bed. Keep a maala in your pocket.

*— to be continued*

---

அச்சுவேலி — நாவலம்பதி

## காட்டுமலைக் கந்தசுவாமி கோயில்

இத்திருக்கோயிலுக்கு அழகிய மடாலயம் ஒன்றை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டுவைபவத்திற் கலந்து கொண்ட மில்க்வைற் தொழிலதிபர் 19-1-80 சனிக்கிழமை பிற்பகல் சுபவேளையில் அதன் அத்திவாரக்கல்லை நாட்டினர் என்று ஆலய தர்மகர்த்தா சிவஸ்ரீ சீ. சிவகுரு ஐயர் அவர்கள் அறியத்தருகிறார்.

---

படிப்பறை: இய்லுமாயின் உங்கள் பிரார்த்தனை அறையும் படிப்பறையும் வேறாய் இருக்கவேண்டும். அன்றேல், ஓர் அறையில் ஒரு மூலையை இக் கருமத்துக்கு ஒதுக்குக. இதனால் உங்கள் மனக்குவிவாற்றல் அதிகரிக்கும்.

— மாணவருக்கு சுவாமி சிவானந்தர்

---

## வீறு விசுவநாதபிள்ளை (கரோல்)

ஆறுமுகநாவலர் அவர்களுக்கு வருடந்தோறும் விழா வெடுத்துவந்த நாம், சென்ற வருடம் அன்னாரின் நூற்றுண்டு விழாவைக் கோலாகலமாகக் கொண்டாடினோம். எனினும் அவ்விழா இன்னமும் தெவிட்டவில்லை. எனவே இவ்வருடம் அடுத்துவரும் 21-11-1980இல் நாவலரின் சகபாடியும் சமகாலத்தவரும் பெருங் கல்விமானும் தொண்டருமான சுதுமலை வைரவநாதர் விசுவநாதர் அவர்களை நினைவு கூருவோமாக.

சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய பெரு நகரங்களில் பல்கலைக்கழகங்கள் அமைக்கப்பெற்று முதன் முதலாக B. A. பரீட்சை நடத்தப்பெற்றபோது சென்னையில் 1857ஆம் ஆண்டில் சித்திபெற்ற முதல் இருவரும் யாழ்ப்பாணத்தவர் என்பதை நம்மவர் அறிந்துகொள்ளுதல் வேண்டும். அவர்கள் இருவரும் வைரவநாதர் விசுவநாதர் என்பாரும் அவர்தம் மாணவர் வைரவநாதர் தாமோதரம் பிள்ளை அவர்களுமாவர். குருவும் சீடரும் பரீட்சையில் சித்திபெற்றுச் சென்னைப் பல்கலைக்கழகத்துக்கும் யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டை மிசனரிமாரின் சாத்திரசாலை என்னும் செமினரிக்கும் பெரும்புகழ் தேடித்தந்தவர்கள்.

அவர்களைப் புகழ்ந்தவர்களுள் ஜி. யு. போப் என்னும் ஐரோப்பியக் கல்விமானும் ஒருவர். அப்பெருமகனுரே தமிழிலுள்ள திருவாசகத்தையும், திருக்குறளையும், நாலடியாரையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததோடு தமது சவக்குழியில் நாட்டப்படும் நடுக்கல்லில் தம்மைத் தமிழ் மாணவன் என்று தமிழில் பொறிக்கச்செய்தவர்.

விசுவநாதர் ஆறுமுகநாவலருக்கு ஈராண்டுகளுக்கு மூத்தவர். அவர் 1820ஆம் ஆண்டு தோன்றி 1880-ஆம் ஆண்டு மறைந்தவர். அவரை நினைவுகூறும் சிறப்பு மலர் உரிய காலத்தில் வெளிவரும் என்பதை அப்போதைக்கு இப்போதே அறியத்தருகிறோம்.

---

### பொன்விழா......

(6-ம் பக்கத்தொடர்ச்சி)

குறிப்பு: (நாவலராயுற்ற அன்னார் பெறும் இராசலிங்கக் கவிராயர். வஞ்சியடிபோற்றும். வஞ்சிக்கொடிபோல்பவளாகிய கலைமகளது திருவடியை வணங்குதல் கவிராயருக்குச் சிறப்பு. கவிராயருடைய பேரன் சேதுபதி என்னும் அடியேன் )

குலரத்தினம் எனும்பெயராற் கூறியழைக் கின்றவராய்க்
கூறு பாட்டால்
பலரத்தினம் ஆனதுபோல் பல்வேறு கலைத்திறத்தின்
பண்பா டுற்று
விலைரத்தினம் மதிப்பின்றி மேதினியிற் புரவலர்போல்
மேன்மை பெற்ற
நிலைரத்தினம் ஆனபுல வோரவரே நெருங்கியுற
நேர்கின் றுரே.

வடிவுடைய நாயகியை வலப்பாகம் வைத்துகந்து
மதிவான் கங்கை
கடியுடைய பொன்வண்ணக் கடுக்கையந்தார் கலந்தணிந்து
கமழுஞ் செக்கர்ச்
சடையுடையார் திருப்பாண்டிக் கொடுமுடியார் திருவருளால்
தனக்கு மிக்கார்
படியுடையா ரொருவரிலர் எனவாழ்நாள் நீடுற்று
மகிழ்ந்து வாழ்க.

---

★ தோல்வியில் தளர்பவனுக்கு வெற்றி வாய்ப்பதில்லை ★



# ஔவை அருந்தமிழ் - 1

## பலாமரம் தழைக்கப் பாடியமை

ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, ஞானக்குறள், அசதிக்கோவை, பந்தனந்தாதி முதலிய பல நூல்களைப் பாடியவர் ஔவையார். அவர் ஒரு பெண் புலவர். அவர் கல்வி, கேள்வி, ஞானம் ஆகியவற்றால் சிறந்த அறிவுள்ளவர். அறிவாற்றல் வாய்ந்த கிழவிகளை ஔவையார் என்று வழங்குதல் வழக்கம்.

ஔவையார் பல தனிப் பாடல்களையும் பாடியுள்ளார். அவர் பிறர் மனத்தில் உள்ளதை அறிந்து பாடவும், வாழ்வும் வளப்பும் உண்டாகும் வண்ணம் பாடவும் வல்லவர். இனிமையான சொற்களை அருமையாகவும் சிக்கனமாகவும் உபயோகித்துப் பொருள் நயம் நிறைந்த பாடல்கள் பாடுவதில் நிகரில்லாதவர். அவரை மன்னர்களும் பிரபுக்களும் புலவர்களும் புரவலர்களும் வரவேற்று உபசரித்து வணங்குவர். அவர் ஏழைகள் வாழும் ஊர்ப்புறங்களுக்கும் கால்நடையாகச் சென்று அவர்களோடு உண்டு, உறங்கி அவர்களின் வாழ்வை வளஞ்செய்வர். ஏழைகள் வீடுகளில் கஞ்சி, கூழ் உண்பதில் அவருக்கு விருப்பம் அதிகம். பெருந்தன்மை இல்லாத மன்னர் மாளிகையில் அவர் தங்குவதையோ விருந்துண்பதையோ மறுத்து விடுவார்.

ஔவையாரைக் கண்டால் குழந்தைகளுக்கு அளவு கடந்த மகிழ்ச்சி உண்டாகும். அவர்கள் ஔவையாரைச் சூழ நின்று துள்ளிக்குதித்து, ''பாட்டி! பாட்டி!! ஒரு பாட்டுப்பாடு'' என்று கெஞ்சுவார்கள். ஔவையார் குழந்தைகளை அணைத்து மகிழ்ந்து பாட்டுப்பாடுவார்.

### கூன்பலா தழைக்கப் பாடியது

ஒரூரில் குறவன் ஒருவன் இருந்தான். அவனுக்கு இரு மனைவியர் இருந்தனர். ஒருத்தி வயதில் மிகவும் இளையவள். குறவனுக்கு இளைய குறத்தி மீது அதிக அன்பு. அதனால் மூத்த குறத்தி இடையிடை துன்பங்களுக்கு ஆளானாள்.

குறவனின் குடிசையின் ஓரத்தில் ஒரு பலாக்கன்று அது வளைந்து வளர்ந்து கூனல் உள்ளதாய் நின்றது. அந்தப் பலாவைக் குறவன் அருமையாக வளர்த்து வந்தான். அவன் ஒருநாள் அயலூர் ஒன்றுக்குப் போனபோது குறத்தியர் இருவரையும் பலாக்கன்றைக் கவனமாகப் பார்த்துக்கொள்ளுமாறு பணித்தான்.

குறவன் போனபின் இளைய குறத்தி வேண்டுமென்று பலாக்கன்றை குறுக்கே வெட்டிவிட்டு, மூத்த குறத்தி மேற் குற்றஞ்சாட்டினாள். அதனைக்கேட்ட மூத்த குறத்தி நடுநடுங்கிக் குறவன் என்ன செய்வானோ என அஞ்சினாள்.

அடுத்த நாள் ஔவையார் அவ்வழியே போனார். மிகுந்த துயரத்தோடிருந்த மூத்த குறத்தியைப் பார்த்து, ''ஏனம்மா வாட்டமுற்று இருக்கிறாய்?'' என்று கேட்டார். அவள் அழுதவாறே அங்கு நடந்தவற்றைக் கூறினாள். ஔவையார் அவளிடம் அஞ்சவேண்டாம் என்று கூறினார்.

அவர் பலாக்கன்றைப் பார்த்தார். மனம் வருந்தினார். அவர் மனத்தில் இவ்வாறு நினைத்தார். ''கூருள்ள வாளினால் வெட்டப்பட்ட கூன்பலா பழையபடி தழைக்க வேண்டும். அது ஓர் இதழாய், கன்றாய், உயர் மரமாய் வளர வேண்டும். வண்டுபோன்ற கொட்டையுடைய செழிப்பான காய்கள் காய்த்துத் தின்னத்தக்கனவாகப் பழங்கள் தொங்க வேண்டும்.'' இந்த நினைப்புப் பாட்டாக வெளி வந்தது.

கூரிய வாளாற் குறைத்திட்ட கூன்பலா
ஓரிதழாய்க் கன்றா யுயர்மரமாய் — சீரியதோர்
வண்டுபோற் கொட்டையாய் வண்காயாய்த் தின்பழமாய்ப்
பண்டுபோ னிற்கப் பலா.

உடனே பலாமரம் பாட்டிற் சொன்னவண்ணம் உருப்பெற்று நின்றது. அதைக்கண்டு வியந்த மூத்த குறத்தி ஒரு கொத்துத் தினை அளந்து ஔவையாருக்குக் கொடுத்து ஏற்றருள வேண்டும் என்று கும்பிட்டாள். இளைய குறத்தி இந்தத் தெய்வாம்சம் பொருந்திய செயலைக்கண்டு அஞ்சி ஒதுங்கி அடங்கி இருந்தாள்.

— தொடரும்

# நாட்டுப்புறத்தில் நைற் பட்டம்

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நைற் பட்டம் என்னும் பிரபுத்தன்மை பெரியவர்களுக்கு வழங்கப்பெற்று வந்தது. இலங்கையருள் முதலில் நைற் பட்டம் பெற்றவர் சேர். முத்துக்குமாரசுவாமி. அவருக்குப்பின் நைற் பட்டம் பெற்ற தமிழ்ப்பிரபு அவருடைய மருகன் சேர். அருணாசலம் ஆவர். சேர். அருணாசலத்துக்குப்பின் நைற் பட்டம் பெற்றவர் சேர். அம்பலவாணர் கனகசபை. இவர் தெல்லிப்பழையைச் சேர்ந்த விழிசிட்டி வாசராவர். இவர் 1906ஆம் ஆண்டு முதல் 1916ஆம் ஆண்டுவரை சட்டசபைப் பிரதிநிதியாயிருந்து அளப்பரிய சேவை செய்தவர். இவர் பெயரால் சேர். கனகசபை வித்தியாசாலை என ஒரு பாடசாலையும் தெல்லிப்பழையில் இயங்குகின்றது.


**மில்க்வைற் செய்தி**

மில்க்வைற் செய்தி தேவையானோர் பின்வருவனவற்றுள் ஏதாவது ஒரு தொகுதியை அனுப்புங்கள். நாங்கள் தபாற்செலவு கட்டிச் செய்தியை அனுப்புவோம்.

நீல சோப் மேலுறை 10, நீம் சோப் மேலுறை 2,
பார் சோப் மேலுறை 2, மெடிக்கேட்டட் ,, 2,
சலவைப் பவுடர் மேலுறை 2.

மில்க்வைற் த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.


**போற்றவேண்டிய பொக்கிஷங்கள் அன்பு அறிவு பணிவு**

# கொழும்புத்திட்டத்தின் கதை

உலகத்தில் பெரியகண்டம் ஆசியா. ஆசியாவில் தெற்கு, தென்கிழக்குப் பகுதிகளிலுள்ள நாடுகள் நாட்டு வளமும் நாகரிகவளமும் வாய்ந்தவை. அவற்றை ஐரோப்பிய நாடுகள் சில தங்கள் ஆயுதப்படை விசேடத்தால் ஆக்கிரமித்துச் சிலகாலம் ஆட்சிபுரிந்தன. கைத்தொழில் வளம்பெற்ற ஐரோப்பிய நாடுகள் உற்பத்தி வளத்துக்கு உதவியான மூலப்பொருள் வளத்தைத்தேடித்திரிந்தபோது தெற்கு தென்கிழக்கு ஆசிய நாடுகள் அவற்றின் தேவையைப் பூர்த்திசெய்தன.

ஐரோப்பியமயமான ஆசிய நாடுகள் ஒருநாள் கண் விழித்துத் தமது சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டன. அரசியற் சுதந்திரம் பெற்ற நாடுகள், பொருளாதார சுதந்திரம் பெறுவதற்குத் திட்டமிட்டபோது, சில வெளி நாட்டு அமைச்சர்கள் கொழும்பு மாநகரிலே கூடிப்பேசி ஒரு திட்டத்தை உருவாக்கினார்கள். இது கொழும்பிலே உருவாக்கப்பெற்ற திட்டமாகலிற் கொழும்புத் திட்டம் எனப் பெயர்பெறுவதாயிற்று.

தெற்கு. தென் கிழக்கு ஆசிய நாடுகளில் வாழுகின்ற கோடிக்கணக்கான மக்கள் தமக்குத் தேவையானவற்றைப் பூரணமாகவோ, ஓரளவுக்கோ பெற்றுச் சுகதேகிகளாய் நல்வாழ்வு வாழ்வதற்கு வழிவகுப்பது முதற்படியாகும். மக்களுக்குத் தேவையான உணவு, உடை, உறைவிடம், போக்குவரத்து கல்வி, சுகாதாரம் ஆகிய அத்தியாவசிய தேவைகள் பெற்றுதல் வேண்டும். இவற்றுக்கு முன்னேற்றப் பாதையிற்சென்று அநுபவம்மிக்க நாடுகள் உபகரித்தல் பெருந்தன்மையாகும். இன்னும் வளர்ந்து வருகின்ற நாடுகள் ஒன்றுக்கொன்று கொடுத்தும் கொண்டும் ஒத்தாசையாக ஒத்துதவி செய்து எல்லோரும் ஒருவருக்காகவும், ஒருவர் எல்லோருக்காகவும் வாழ்தல் திட்டத்தின் பெருநோக்கமாகும்.

உள்நாட்டுப் பிரச்சினைகளில் தலையிடாது, நாடு முழுவதும் பொதுவாக முன்னேற்றம் அடையவேண்டும் என்பதையே குறிக்கோளாகக்கொண்டு கொழும்புத்திட்டம் உருவாக்கப்பெற்றது.

வளர்ந்த நாடுகளின் விஞ்ஞானிகள் தொழில்நுட்ப நிபுணர்கள், வைத்திய நிபுணர்கள், விவசாய நிபுணர்கள், பேராசிரியர்கள், கலைவல்லுநர்கள் எல்லோரும் பல நாடுகளிலிருந்தும் பரஸ்பரம் பிறநாடுகளுக்குத் தம் திறமைகளைக் கற்பிக்கவும் காட்டிக்கொடுக்கவும் ஆயத்தமாயினர்.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்னும் பண்டைத் தமிழர் பண்பாட்டினைச் செயலிற்காட்ட உதவிய உலகளாவிய ஒரு பெரும் உபகரிப்புத்திட்டம் கொழும்புத் திட்டம். தத்தம் நாட்டு அரசாங்கத்தின் செலவில் பிற நாடெல்லாம் சென்று சேவைமனப்பான்மையில் உதவி செய்யத் தூண்டிய திட்டம் கொழும்புத்திட்டம். சிநேக மனப்பான்மையில் செயல் புரிந்து சேவை செய்வதற்கு ஆண். பெண் ஆகிய இருபாலருமாக ஆயிரமாயிரம் நிபுணர்கள் எங்கெங்கே உதவி ஒத்தாசை தேவையோ அங்கெல்லாம் செல்வராயினர்.

நாடுகளெங்கும் புத்தழகும் புதுப்பொலிவும் பொங்கித்ததும்பவும், மக்கள் மனத்தில் புத்துணர்ச்சி பூத்துக் கனியவும் கொழும்புத் திட்டம் பன்முகப்பணிகள் புரியத திட்டம் வகுத்தது. தெற்கு தென்கிழக்கு ஆசிய நாடுகளின் மக்கள் புதுவாழ்வு பெற்றுப் பூரிக்கத் தொடங்கினார்கள். இருளும் நோயும் பஞ்சமும் நிறைந்து வெளியுலகுக்குத் தெரியாது ஒதுங்கிக்கிடந்த நாட்டுப்புறங்கள் பல உலகப்புகழ்பெறும் ஒளி நகரங்களாக உருப்படுவனவாயின.

எங்கெங்கும் இரும்புத் தொழிற்சாலைகள், நெசவு சாலைகள், உற்பத்தித் தொழிற்சாலைகள், விவசாயப் பண்ணைகள், வீடமைப்பு நிரைகள், கால்நடை அபிவிருத்திகள், கனிதரும் கற்பகக்கா போன்ற தோப்புகள், பல் கலைக்கழகங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள். வைத்திய சாலைகள், நாளங்காடிகள், அல்லங்காடிகள், ஆகாய விமான நிலையங்கள், மிகப்பெரிய துறைமுகங்கள், இன்னும் நாட்டின் அபிவிருத்திக்கு என்னென்ன வேண்டுமோ அவையாவும் கொழும்புத் திட்டத்தின் உழைப்பினாலும் உபகரிப்பினாலும் பின்தங்கிய நாடுகளுக்கு வரிசையாகக் கிடைப்பனவாயின.

— தொடரும்




**Thought for the year**
**Thought for ever**

*Peace for all*
*Joy for all*

## SONG OF UNITY

Trees are many, the grove is one
Branches are many, tree is one.
Shores are many, Sea is one
Limbs are many, body is one
Stars are many, Sky is one
Flowers are many, honey is one
Pages are many, book is one
Thoughts are many, thinker is one
Tastes are many, taster is one
Actors are many, the drama is one
Nations are many, world is one
Religions are many, truth is one
The wises are many, wisdom is one
Beings are many, breath is one
Classes are many, college is one
Find out this one behind the many
Then life shall enjoy peaceful harmony.

# திரும்பிப்பார்



தம்பி! சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த எம் மூதாதையரான தமிழர் எல்லாவழியாலும் எல்லா வகையாலும் உத்தமராகவே வாழ்ந்தார்கள். அவர்கள் நம்பிக்கை, நேர்மை, பரோபகாரம், சர்வோதயம் முதலிய நல்லியல்புகளின் கொள் கலன்களாகவும் உருவெளித் தோற்றங்களாகவும் உலாவினார்கள். அவர்களின் பெருந்தன்மையை அறிந்தவர்கள் அவர்களைத் தமக்குத் தலைவர்களாகக் கொண்டு அவர்களைப் பின்பற்றி வாழ்ந்தார்கள்.

நாம் தமிழர் என்றும் தமிழர் என்றோர் இனமுண்டு என்றும் தற்பெருமையாகப் பேசித்திரிகின்ற நாம், உண்மையில் தன்மதிப்பு உள்ளவர்களா என்று சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். சென்ற நூற்றாண்டில் தமிழர் என்னும் சாகியத்தாருள் தலையாய மனிதர் எனப் பிறர் மதித்த பெரியார்களுள் ஆறுமுகநாவலர், முத்துக்குமாரசுவாமி, இராமநாதன், அருணாசலம், ஆனந்தக்குமாரசுவாமி முதலானோர் தலையாய மனிதர் என்பதோடு அவர்கள் ஒளி மணிகளாகவும் வாழ்ந்தனர். அவர்கள் இனமத வேறுபாடுகளையும், வர்க்கப் போராட்டங்களையும் அறியாதவர்கள் அவர்கள் காலத்தில் கோஷமிடுவோர் கும்பல்கள் உருவாகவில்லை. அவர்கள் யாவர்க்குமாம், எல்லார்க்குமாம் என்னும் வழியைக்கண்டு காட்டியவர்கள். அவர்கள் மீது நாம் மதிப்பு வைத்திருத்தலை மறக்கலாகாது.

## ஏழாலையில் மகா சிவராத்திரி விழா

எதிர்வரும் 14.2-80 வியாழக்கிழமை ஏழாலை இலந்தைகட்டி ஸ்ரீபாதாள ஞானவைரவர் ஆலயத்தில், மகா சிவராத்திரி விழா அதிவிமரிசையாக நடாத்த மேற்படி ஆலய இந்து இளைஞர் மன்றம் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கின்றது. எனவே அடியார்கள் யாபேரும் திரளாக வந்து நான்குசாம விசேஷ அபிஷேக ஆராதனைகளிலும் கலந்து எம்பெருமானின் திருவருட்கடாட்சத்தினைப் பெற்றுய்தி பெறுவதுடன், ஆலய முன்றலில் நடைபெறவிருக்கும் கதாப்பிரசங்கம், மற்றும் கலைநிகழ்ச்சிகளையும் கண்டுகளிக்குமாறு அறியத்தருகின்றோம்.

உங்கள் தேவைகளைக் குறைக்குக. மகிழ்ச்சியான, மன நிறைவான வாழ்வு நடாத்துக.

— சுவாமி சிவானந்தர்

## பாலர்பாடசாலைத் திறப்புவிழா

31-1-80 தைப்பூசத் தினத்தன்று சாவல்காடுப் பகுதியில் சர்வோதய அமைப்பின்கீழ் உருவாகிய பாலர் பாடசாலையை மில்க்வைற் அதிபர் அவர்கள் திறந்துவைத்தார். அத்துடன் சில சிறுவர்களுக்கு வித்தியாரம்பம் செய்து ஏடுகள் பொன்மொழி அட்டைகளையும் அன்பளிப்பாக கொடுத்துக் கிராமந்தோறும் பாலர் பாடசாலைகள் அமைய வேண்டிய அத்தியாவசியத்தை எடுத்துக்கூறினார்.

## சிக்கனவாழ்வு

பத்துப் பசுமாடு வளர்ப்பவன் வீட்டுப் பெண் ஒருமுறை ஒரு பசுமாடு வளர்ப்பவன் வீட்டுப்பெண்ணிடம் நெய் கைமாத்து முறையில் வாங்கினாள் என்பர். இது உபகதையல்ல. ஊர்தோறும் நடைபெறுகிற உண்மைக்கதை எத்தனையோபேர் நன்றாக உழைத்தும் தமது ஊதாரித்தனத்தால் உள்ளதை எல்லாம் ஒருவேளை வேடிக்கையில் உதறித் தள்ளிவிட்டு, அடுத்தவேளைத் தேவைக்கு அயலவரிடம் கையேந்தித் திரிய வேண்டியவராகிறார்கள்.

பெரிய நகரங்களில் பெரிய உத்தியோகம் பார்க்கும் பெரியவர்கள் சிலர், தாம் உத்தியோகம் பார்க்கும் இடத்தில் சிறிய வேலைபார்க்கும் சிற்றூழியரிடம் கைமாத்தாக வட்டிக்குப் பணம் பெறுவதை எல்லோரும் அறிவர். சிற்றூழியர் பலர் வெகு சிக்கனமாக வாழ்ந்து தமது வருவாயில் ஒருபகுதியைச் செப்பமாகச் சேமித்துக்கொள்வர். அவர்களுக்கு ஔவையார் அருளிய நல்வழிப்பாட்டு நன்றாகத்தெரியும்.

ஆன முதலி லதிகஞ் செலவானால்
மான மழிந்து மதிகெட்டுப் – போனதிசை
எல்லார்க்கும் கள்வனாய் ஏழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு.

### The Good Path

If One's expenses should exceed one's capital, losing one's honour, losing one's sense despised as a cheat wherever one goes, one becomes a wicked person through seven births and obnoxious to all good people.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

### பொன்னிதழ்........

கேட்டுப் பயன்பெறுவதாக அவர்கள் எழுதும்போது, அவர்கள் கடல் கடந்து சென்றுறைந்தும் தாய்மொழியாம் தமிழ்மீது கொண்ட தீராத பேரன்பும் பேரபிமானமும் கடலிலும் வானத்திலும் பெரியனவென அறியும்போது உள்ளம் உருகுகின்றது. ஊக்கம் பிறக்கின்றது. வாசக அன்பர்கள் பலரின் தனித்தனி விருப்பத்தை நாம் ஓரிதழில் ஓரிடத்தில் நிறைவுசெய்தல் ஒண்ணாது. எனவே வெவ்வேறு மாதங்களில் வெளிவரும் செய்தியிதழ்களில் அவர்தம் விருப்பத்தை ஓரளவுக்கு நிறைவுசெய்ய முயற்சி எடுப்போம்.

★ ஒழுக்கத்தில் இன்பங் காண்பவன் உத்தமனாவன் ★

# TRIBUNE
## பத்திரிகையையும் பத்திராதிபரையும்
## பாராட்டுகிறோம்

கொழும்பில் கொம்பனித் தெருவிலிருந்து வாராந்தம் ஆங்கிலத்தில் வெளிவருகின்ற உரிமைக்காவலர் என்னும் பொருள்பொதிந்த Tribune பத்திரிகையையும் அதன் ஆசிரியர் உயர்திரு எஸ். பி. அமரசிங்கம் அவர்களையும் பாராட்டுவதில் நாம் பெருமையடைகிறோம். அமரசிங்கம் அவர்களின் ஆங்கிலம் மகாராணியாரின் ஆங்கிலம். அக்காலத்தில் அடிசன், கோல்ட் சிமித், யோன்சன் முதலானவர்கள் சமூகத்தைத் திருத்துவதற்காகத் தகர்க்க முடியாத தர்க்கரீதியில் எழுதிய கட்டுக்கோப்பில் அமரசிங்கம் அவர்கள் எழுதுகிறார்கள். அவர்களின் ஆசிரியத் தலையங்கங்களும் பிறவும், அண்மையில் கூட்டுச்சேரா மகாநாட்டில் கியூபாவில் கண்டுவந்த நிகழ்ச்சிகளையும் அவர் அற்புதமாக எழுதியுள்ளார். இன்று வெளிநாடுகளில் வேலை பார்க்கும் இலங்கையர் பலர் இவர் எழுதுவனவற்றை அட்சரந்தவருமல் படித்துவருகிறார்கள் என்பதை அறியும்போது இத்தகைய புகழ்பூத்த எழுத்தாளர் நம்மவராய் இருக்கிறாரே என்று நாமெல்லோரும் பூரிப்படைதல் வேண்டும். இதனால் இவர் எழுதுவனயாவற்றையும் அப்படியே ஒத்துக்கொண்டு விழுங்குகிறோம் என்பதல்ல. இவர் பத்திரிகையின் பெயருக்கேற்ப உரிமைக்காவலராயும், மக்களார்வத் தலைவராயும், மன்னுரிமைக் காவலராயும் விளங்குகின்றார் என்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.

இப்பத்திரிகையை 1954ஆம் ஆண்டு தொடக்கம் ஆர்வத்தோடு படித்துவருபவர்களுள் நாமும் இடம்பெறத் தகுதியுடையவர்கள். இப்பத்திரிகை வெள்ளி விழாவின் பின் பொன் விழா, வைர விழா, நூற்றாண்டு விழா முதலிய விழாப்பொலிவுகள் காணவேண்டும் என்றும், அமரசிங்கம் அண்ணல் அரோக திடகாத்திரராய் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து பணிபுரிதல் வேண்டும் என்றும் வாழ்த்தி வணங்கியமைகிறோம்.





சலவைப் பவுடர் உறை 10 கொடுத்து
பெரிய பொலித்தீன் பை அல்லது
யோகாசனம் செய்முறை விளக்கப்படம்
ஒன்றும், யோகாசனப் புத்தகம்
ஒன்றும், அல்லது
அப்பியாசப் புத்தகம் ஒன்று
இனமாகப் பெற்றுக்கொள்ளலாம்

மில்க்வைற் தொழிலகம்
யாழ்ப்பாணம்.




## அநுபவமுள்ள கமக்காரன்

அநுபவம் உள்ள கமக்காரன் தனது நெல்வயலில் அறுவடை முடிந்தபின் ஆடு மாடுகளை அங்கேயுள்ள ஒட்டுகளை மேயவிடுவதுண்டு. அவை மேய்ந்தபின் அந்த நிலத்தில் உடன் பயன்தரத்தக்க உப உணவுத் தானியங்களை விதைத்து நல்ல விளைவு பெறுவது வழக்கம். உழுந்து, பயறு, எள் முதலிய தானியங்கள் வரண்ட பிரதேசத்திலே நன்றாக விளையும்.

உழுந்தும் பயறும் உடம்புக்கு நல்லவை. புரதச்சத்து மிகுந்தவை. பலவித பலகாரங்களுக்கு மூலப்பொருளானவை. உழுந்து மேலதிகமாக விளைந்தால், அப்பளம், வடகம் என்பன செய்வதற்கு வரப்பிரசாதமாகும்.

எள் சிறுதானியங்களுள் அரசன் போன்றது. எள்ளின் விலை அதிகரிப்பதால் நல்லெண்ணெயின் விலை பெற்றோலின் விலையிற்பார்க்க அதிகரித்துள்ளது. சுத்தமான நல்லெண்ணெய் இன்று முப்பது ரூபாவுக்குக் கிடைப்பதே அருமை. தமிழர் வாழ்வில் நல்லெண்ணெய் முக்கிய பங்குபெறுவது. தமிழனை இனங்காண்பதற்குத் தலையை மணந்து பார்க்கிற வழக்கமும் உண்டு.

புத்திசாலியான கமக்காரன் அறுவடை செய்த நிலத்தில் பூசினிக்கொடியை உண்டுபண்ணுவதும் உண்டு. பூசினி இனத்தில் நீற்றுப்பூசினி, சர்க்கரைப்பூசினி, சுரை, பீர்க்கு என்பன வரட்சியைத் தாங்கியும் பயன்தரும்.

வயல்நிலத்தில் பல பாத்திகள் உள்ளவர் ஒரு பாத்தியில் கிணறுதோண்டி நீரிறைக்க வசதிசெய்வதும் உண்டு. நிலத்தை நம்பி வாழ்பவருக்கு மண்ணின் வளமும் அதன் உபகரிப்பும் நன்குதெரியும். அதைப்பற்றிச் சொல்ல நாம் யார்?

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் "சிவநெறிப்புரவலர்" க. கனகராசா ஜே. பி. அவர்கள்.
கௌரவ ஆசிரியர் திரு. க. சி. குலரத்தினம் 1-2-80.